
தமிழரசு
16-10-1990 ரூ.1





பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி, தருமபுரியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், காவல்துறையினரின் சிறப்பு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்களை காவல், தீயணைப்பு, சிறை மற்றும் ஊர்க்காவல் படையினருக்கு வழங்கினார். (25.9.90)

# இந்த இதழில்...


அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா ... 2

சுற்றுலா வளர்ச்சியில் புதிய வேகம்!
—மாண்புமிகு அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி ... 3

வன உயிரின வார விழா ... 6

தொழில் வளத்தில் முதன்மை பெற முனைந்து நிற்கும் தமிழகம் ... 9

மீனவ சமுதாயத்தார்க்கு மேலான வாழ்வு
— மாண்புமிகு அமைச்சர் திரு.சந்திரசேகரன் ... 13

இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில் வாரியம் ... 16

தமிழ் உணர்வை ஊட்டிய பெருமை வாய்ந்த பெருமகனார் சுந்தரனார் ... 17

மதுரை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் அரிய பணிகள் ... 20

தந்தை பெரியார் - ஒரு தீர்க்கதரிசி
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 23

வாழவைக்கும் வைரத் தொழில் ... 24

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 26

பட்டு உற்பத்தியில் பெரும் சாதனை!
—மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு ... 33

தமிழகச் சுற்றுலாத் தலங்கள் ... 35

ஒருங்கிணைந்த மானாவாரிப் பயிர் மேம்பாடு ... 39

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய விளம்பரங்கள் ... 41




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை - பீஜிங்கில் நடைபெற்ற ஆசியப் போட்டியில், தங்கப் பதக்கம் பெற்ற இந்திய அணியின் கபடி விளையாட்டுக் குழுத் தலைவரான தமிழ்நாடு வீரர் திரு. எஸ். இராஜரத்தினம் 7.10.90 அன்று சந்தித்து மாலையணிவித்தார்; அவருக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டுத் தெரிவித்தார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:21 இதழ்:8

16-10-1990


★ முதலாவது அட்டையில் 'பூம்புகார் எழுநிலை மாடத்'தின் எழில்மிகு தோற்றம்!

★ நான்காவது அட்டையில் மதுரை மூதூர்க் கோயிலின் கவின்மிகு தோற்றம்!

★ சுற்றுலா வளர்ச்சி தொடர்பான சிறப்புக் கட்டுரைகள் உள்ளே!



# அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா

2-10-90 முதல் 7.10.90 வரை.

அண்ணல் காந்தியடிகள் 122-வது பிறந்த நாள் விழா, அக்டோபர் 2 முதல் 7 வரை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

அக்டோபர்-2 அன்று காலை சென்னை மெரினா கடற்கரையிலுள்ள அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு, மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, மாண்புமிகு முதல்வர் கலைஞர், சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து நூற்பு வேள்வியும், இசை நிகழ்ச்சியும் நடந்தன. தக்கர்பாபா வித்தியாலாவில் மாணவர்கள் பங்கேற்கும் சமபந்தி விருந்தும் நடைபெற்றது.

**தொடக்க விழா:**

பிற்பகல் கல்லூரி-பள்ளி மாணவ மாணவியர் மற்றும் மகளிர் பங்கேற்ற ஊர்வலம் ஒன்று காந்தியடிகள் சிலையிலிருந்து புறப்பட்டு சாந்தோம், திரு.வி.க.பாலம், அடையாறு வழியாக, காந்தி மண்டபத்தை வந்தடைந்தது.

அன்று மாலை காந்தி மண்டபத்தில் நடந்த விழாவுக்கு, மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தலைமை வகித்து, மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்:

''காந்தியடிகள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றிட நாம் சபதம் மேற்கொள்ள வேண்டும். காந்தியடிகள், தாய்மொழி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார். தமது சுயசரிதையை முதலில் அவர் தாய்மொழியான குஜராத்தி மொழியில்தான் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்தவர் காந்தியடிகள். அவர் எழுதிய 'ஹரிஜன்' என்னும் நூலில் 'தீண்டத்தகாதவர் என்று பிரிப்பதே பாவம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.''

திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில் அண்ணல் காந்தியடிகளின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார்.

திரு. டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் பேசுகையில், விடுதலைப் போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பங்கு பற்றியும், தந்தை பெரியார் அதில் ஈடுபட்டது குறித்தும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் பேசுகையில், காந்தியடிகள் எளிமையாக வாழ்ந்து காட்டினார் என்று கூறி, சுதந்தரப் போராட்ட வீரர்களுக்குத் தமிழக அரசு செய்துவரும் உதவிகள் குறித்து விளக்கினார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பேசுகையில், காந்தியடிகளின் கருத்துக்கள் இளம் உள்ளங்களில் பதிய வேண்டும் என்றும், அவரது இலட்சியங்கள்-தத்துவங்கள் நிறைவேற்றிட நாம் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று இரவு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. திரைப்படமும் காண்பிக்கப் பட்டது. விழாவினையொட்டி, அரசின் பல்வேறு துறைகள் பங்கேற்ற கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**நிறைவு விழா**

நிறைவு விழா 7.10.90 அன்று நடந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

திருவாளர்கள் ஸோபாகாந்த்தாஸ், சி.ஆர். பட்டாபிராமன், ஆகியோர் பேசினர்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, விழாப் பேருரை நிகழ்த்தினார்.

— நமது செய்தியாளர்

# சுற்றுலா வளர்ச்சியில் புதிய வேகம்



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

## திரு கே.பி. கந்தசாமி

சமுதாய மறுமலர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலா பெரிதும் பயன்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதியிலும் உள்ள மக்களை ஒன்றாக இணைக்கவும் பன்னாட்டு மக்களை ஒன்று சேர்க்கவும் ஒரு பாலமாக அமைகிறது சுற்றுலா. எனவே, சுற்றுலா வளர்ச்சியில் தமிழகம் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுலா வளர்ச்சிக்காக மாநிலத் திட்டத்தின் கீழும் மத்திய அரசின் நிதி உதவியுடனும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. எனினும், பல்வேறு மையங்களில் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவேற்ற நாம் இன்னும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு இடத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான தேவைகளை ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் இந்த அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது சுற்றுலாப் பயணிகளுக்குச் சாலை வழி வசதி செய்து தரும் திட்டங்களுக்கும் சுற்றுலா மையங்களை மேம்பாடு செய்யும் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. சாலைவழி செல்லும் பயணிகளுக்கும், மேல்மருவத்தூர் கோவிலுக்கு வருகை தருபவர்களுக்கும் சாலைவழி வசதி செய்யத்திட்டமிட்டு அங்கே மோட்டல் கட்டுவதற்காக ரூ.19.00 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. சென்ற 16.3.90 அன்று இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமான கடலூரில் அழகான கடற்கரையும் நீர்விளையாட்டுக்கேற்ற பரந்த நீர்ப்பரப்புடைய உப்பங்கழிகளும் உள்ளன. கடலூர் கடற்கரையில் சுற்றுலா வளாகம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டு 1990-91-ஆம் ஆண்டு இதற்காக ரூ.25.21 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு 1990 மே திங்கள் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களும் தனியார் ஓட்டல்



களும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு இல்லை. அங்கே மைய அரசு அளித்த ரூ.13.36 இலட்சத்தைக் கொண்டு எட்டு கடற்கரைக் குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போலவே மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.34.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் 'யாத்ரீ நிவாஸ்' கட்டப்பட்டுள்ளது.

திருச்சி மலைக்கோட்டையை அழகுபடுத்தும் நோக்கத்தோடு ரூ.5.25 இலட்சம் செலவில் ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த பிப்ரவரி திங்களில் துவக்கப்பட்டு, அருள்மிகு தாயுமானவர் சுவாமி கோவில் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

முதுமலை வனவிலங்குச் சரணாலயம் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியைப் பெருக்கித்தர கடலூரில் விடுதி ஒன்று கட்ட மத்திய அரசு ரூ.21.32 இலட்சம் 1989-90-ல் அனுமதி அளித்துள்ளது.

நீலகிரி மலைத்தொடரில் உதகை செல்லும் மலைப்பாதை மேட்டுப்பாளையத்திலிருந்து தொடங்குகிறது. பெரும்பாலான பயணிகள் உதகைக்குச் சாலை வழியாகத்தான் செல்கின்றனர். சாலை வழியாக உதகைக்குச் செல்லும் பயணிகள் வசதிக்காகச் சாலையோர வசதிகள் எதுவும் அங்கே செய்யப்படவில்லை. இந்தக் குறையைப் போக்க மேட்டுப்பாளையத்தில் சாலையோர வசதிகள் செய்வதற்காக ரூ.12.24 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. திருப்பெரும்புதூரிலும் இதைப் போலவே சாலையோர வசதிகள் செய்துதரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கூனூருக்கும் அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்ப்பதற்கும் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகக் கூனூரில் இளைஞர் விடுதி ஒன்று கட்ட மாநிலத் திட்டத்தின்கீழ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.12.24 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் ரூ.5.44 இலட்சத்தில் உணவகம் ஒன்று கட்டப்பட்டு அதனைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திவருகிறது.

திருவரங்கம், பாபநாசம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள குளியல் துறைகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்துதரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறையில் ஒளி விளக்குகள் அமைக்கவும், கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறைக்குச் சென்றுவர விசைப் படகுகள் வாங்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மதுரையில் வண்டியூர் கண்மாய் என்ற இடத்தில் உணவகம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாக்க, கடற்கரையில் தடுப்புகள் அமைக்கவும், வளாகத்தை அழகு படுத்தவும், பயணிகள் தங்கும் மண்டபத்தைச் சீர்படுத்தவும் இன்னும் இதுபோன்ற பணிகளுக்கு ரூ.50.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தரங்கம்பாடியிலுள்ள டச்சுக்காரர்கள் காலத்திய பழமை வாய்ந்த ஆளுநர் மாளிகையைப் புதுப்பித்து அழகுபடுத்திச் சீரமைத்துப் பாதுகாக்க ரூ.3.00 இலட்சம் செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



சென்னையில் 26.9.90 அன்று நடைபெற்ற உலகச் சுற்றுலா நாள் விழாவில்....

மாவட்ட உலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் உள்ள திருமூர்த்தி மலையின் மேம்பாட்டிற்காக ஏற்கெனவே அனுமதி அளித்த ரூ.2 இலட்சத்திற்கும் மேல் ரூ.1.50 இலட்சம் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 'ஓட்டல் தமிழ்நாடு' ஓட்டல்களின் மேம்பாட்டிற்காக ரூ.5.00 இலட்சம் 1989-90-ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியச் சுற்றுலா ஆண்டு 1991-க்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பயண வட்டங்களில் தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களின் மேம்பாட்டிற்காக 1991-ஆம் ஆண்டு ரூ.12.50 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அனுமதி பெற்ற – தகுதிவாய்ந்த சுற்றுலா வழிகாட்டிகள் இல்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய – தகுந்த நபர்களைத் தேர்தெடுத்து 1990-91-ஆம் ஆண்டில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எழும்பூர் இரயில் நிலையத்தின் வழியாகச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கும், வந்திறங்கும் பயணிகளுக்கும் தேவையான தகவல் அளிக்கச் சுற்றுலா தகவல் மையம் ஒன்று அங்கே திறக்கப் பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்களைக் கொடுக்கச் சுவரொட்டிகள், மடிப்பேடுகள், கையேடுகள் ஆகியவை ரூ.18.00 இலட்சம் செலவில் கொண்டுவரப்பட்டு, அவை வெளிநாட்டில் உள்ள மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்களுக்கும், மாநிலத்தில் உள்ள சுற்றுலா அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அத்தோடு, மாநிலங்களில் இருந்து வெளி வரும் முக்கிய சஞ்சிகைகளிலும் பலவண்ண விளம்பரங்கள் அவ்வப்போது கொடுக்கப்பட்டு வருகின்றன.

விருந்தோம்பல் திட்டத்தின் கீழ்- பயண முகவர்கள், எழுத்தாளர்கள் போன்ற சுற்றுலா சம்பந்தப்பட்ட வல்லுநர்களை அழைத்து, தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

சுற்றுலா மேம்பாட்டு நோக்கத்துடன் பொங்கல் விழா, கோடை விழா, உலகச் சுற்றுலா நாள், வசந்த விழா போன்ற விழாக்களும் நடத்தப்படுகின்றன. சுற்றுலாத் துறை, பொருட்காட்சிகளிலும் பங்கு கொள்கிறது. இந்த விழாக்களுக்கும் பொருட்காட்சிகளுக்கும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அழைக்கப்படுகின்றனர்.

விடுமுறைச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா போன்ற புதுவகைச்சுற்றுலா மேம்பாட்டிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மலைத்தொடர், பழனி மலைத்தொடர் ஆகிய இடங்களில் மலையேறும் திட்டம் ஆண்டுதோறும் வெற்றிகரமாக நடத்தப்படுகிறது. இத்தகைய திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

சுற்றுலா, வேகமாக வளர்ந்து வரும் ஒரு தொழில். சுற்றுலாவில் பலவகை உண்டு. இவை மாறிக்கொண்டே வரும். இந்த மாறுதல்களுக்கு ஏற்ப சுற்றுலாத் தொழில் சிறந்த முறையில் வளர்ச்சியடையத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். எனவே சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரத்திற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கவும், பல்வேறு சுற்றுலா மையங்களின் தேவைக்கேற்பத் திட்டங்கள் தீட்டவும், தமிழக அரசு சுற்றுலாத் துறை அமைச்சரான எனது தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா அறிவுரைக் குழுவை மாற்றியமைத்துள்ளது.

*பயணிகள் பார்வையில்...*

# பூம்புகார்

கட்டிடக் கலையின் அழியாச் சின்னமாக விளங்கும் இக்கலைக் கூடத்தின் கவர்ச்சி, இந்தப் பக்கம் வருகிற எந்தப் பயணியையும் ஈர்த்திழுக்கிறது. இதயத்தைக் கவர்கிறது. தற்கால கட்டிடக் கலை, பழங்கால கட்டிடக்கலை ஆகிய இரண்டினையும் இணைத்து ஒரு புதுமையினை உருவாக்கும் பெருந்திறன்மிக்க கட்டிடக்கலை வித்தகர்கள் இந்தியாவில் இருப்பது கண்டு வெளிநாட்டார் ஒருவர் பெரிதும் மகிழமுடிகிறது.

கலைக்கூடத்தினுள் நுழைந்தவுடன், இந்திய மண்ணின் புகழ்மிக்க கலைச் செல்வத்தினை அழியாது காத்திட, ஆற்றல்மிக்க கலைவல்லாரை உருவாக்கி ஊக்குவித்து இருப்பதைக் காணவும் முடிகிறது! கலை காக்கப்படுகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி பிறக்கிறது; நம்பிக்கையும் பிறக்கிறது.

எழிற் சிற்பங்கள் கூறும் கதை, மனித மாண்புகளாம், நேர்மை, கற்பு ஆகிய உயர் பண்புகளின் பெருமையைக் காட்டுகிறது. இத்தகைய பண்புகளைப் போற்றிக் காக்கும் இந்நாட்டு மக்களின் மனவளம் எதிர்காலத்திற்கும் நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக அமைந்துள்ளது.

—திரு. மியூட்டின், (ஆராய்ச்சியாளர்)
9, பாரடே தெரு,
பாரிஸ், பிரான்ஸ்.



கலைக்கூடத்தைப் பார்க்கும்போது, சிலப்பதிகாரக் கதை கண்முன்னே வந்து நிற்கிறது. சிற்பிகள் மிகவும் சிறப்பாக அவற்றை எடுத்துக்காட்டியுள்ளனர். இது, இவ்விடம் வரும் வெளிநாட்டாரைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

— திரு. சி. சுந்தரேசன்,
யாழ்ப்பாணம்
இலங்கை
22-8-73.

கண்ணகியின் எழில்மிக்க கலைக்கூடமும், மாதவியின் எழில் கொழிக்கும் சிலையும் கருத்தைக் கவர்கின்றன.

— திரு. பிரான்ஸ் ஆண்ட்ரோ,
பிரான்ஸ்
20-8-73



# வன உயிரின வார விழா

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வண்டலூர் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா'வில் நடைபெற்ற வன உயிரின வார விழாவில் பங்கேற்று, உயிரியல் பூங்கா நுழை வாயிலைத் திறந்து வைத்தார். 5.10.90 அன்று நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.பி. கந்தசாமி, திரு. எஸ். துரைமுருகன், திரு. கே. சுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:**

''இன்று வன உயிரின வாரத் தொடக்க விழா, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நுழை வாயில் திறப்பு விழா, தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா ஆகிய இந்த மூன்று நிகழ்ச்சிகளும் இணைந்துள்ள இனிய விழாவில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்வாய்ப்பினை நான் பெற்றுள்ளமைக்காகப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''ஒரே ஆண்டில் இந்த அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நான் இரு முறை வந்துள்ளேன். இதற்குக் காரணம் என்னவென்றால், சில நேரங்களில் மனிதர்களைவிட மிருகங்களையே அதிகமாகப் பிடிக்கின்றது. ஏனென்றால், அவை எப்போதும் நன்றியுள்ளவையாக இருக்கின்றன என்பதுதான்.

''இன்றைக்கு இந்த உயிரியல் பூங்காவிலே இருக்கின்ற விலங்குகள், பறவைகள் அனைத்தும் நல்ல முறையிலே பேணிக்காக்கப்பட வேண்டும் என்பதிலே மட்டற்ற அக்கறை கொண்ட தமிழக அரசு, 1973-ஆம் ஆண்டிலேயே இந்தப் பகுதியில் ஓர் உயிரியல் பூங்காவைப் பெரிய அளவில் அமைத்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடித்து, இந்தப் பூங்கா இங்கே அமைந்து, இன்று மேலும் வளர்ச்சி பெற்ற நிலையிலுள்ளதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த உயிரியல் பூங்காவிலே நீங்கள் சுற்றிப் பார்த்தால் அந்த மிருகங்கள் மூலமாக சில பாடங்கள் கிடைப்பது மாத்திரமல்ல, சில கொள்கைகளுக்கான விளக்கங்கள் கூடக் கிடைக்கும். இங்கே போய் நீங்கள் பார்ப்பீர்களேயானால் குறைவாக இருக்கின்ற 'சிங்கங்களுக்காக ஓர் இடம், கொஞ்சம் பலமாக இருக்கின்ற யானைகளுக்காக ஓர் இடம் - கூட்டமாக நிறைய இருக்கின்ற மான்களுக்காக ஓர் இடம் - பறவைகளுக்காக ஓர் இடம் என்று எந்தெந்த மிருகங்களுக்குக், எந்த அளவிற்கு இடம் தேவையோ அந்த அளவிற்கு இங்கே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மிருகங்களுக்கு கூட இட ஒதுக்கீடு செய்வதை நாம் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் மனிதர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதைத்தான் ஒத்துக் கொள்ள மறுக்கிறோம். இந்தப்பூங்காவை ஒருமுறை சுற்றிப் பார்த்த பிறகாவது, உயர்ந்தவர்கள், தங்களை மேலோர் என்று கொண்டிருப்பவர்கள், தாங்கள் ஏழை எளியவர்களிடமிருந்து அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து பறித்துக்கொண்ட உரிமைகளை நாமே வைத்துக் கொண்டிருப்பது முறையல்ல என்ற ஒரு புதிய கொள்கைப் பாடத்தை இந்த உயிரியல் பூங்காவைச் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் அறிந்து கொள்வார்கள்; அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

''ஒரு நாட்டிலே 33 விழுக்காடு காட்டுப்பகுதி இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றார்கள். ஆனால், நம் மாநிலத்தில் 17.5 விழுக்காடு தான் காடு இருக்கின்றது. கடந்த காலத்தில் 15 விழுக்காடு காட்டுப் பகுதி இருந்தது. அதன் பின்னர் சில ஜமீன் காடுகள் எல்லாம் இணைக்கப்பட்டு இன்று நம் மாநிலத்தில் 17.5 விழுக்காடு காட்டுப் பகுதி இருக்கின்றது. இதை மேலும் பெருக்கி 33 விழுக்காடு அளவிற்கு நாம் கொண்டு வந்தால் தான் பருவ மழை பெய்திடவும் வளம் பெருகிடவும் இயலும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

''வனத்துறையைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்களுடைய அயராத முயற்சியாலும் ஆர்வத்தாலும் இந்தத் துறை அதிகாரிகளுடைய நல்லெண்ண ஒத்துழைப்போடும் இதனுடைய வருவாய் இன்றைக்குக் கூடியிருக்கின்றது. முன்பு 33 கோடி ரூபாய் ஆண்டு வருமானம் என்றிருந்த நிலைக்கு மாறாக 89-90-ஆம் ஆண்டிலே 48.5 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கின்றது. முன்பு வனத்துறைக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.43 கோடி என்றிருந்ததற்கு மாறாக 90-91-ஆம் ஆண்டில் 54 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 7-வது திட்டக் காலத்தில் வனத்துறைக்காகவும் இதனை வளர்ப்பதற்காகவும் இதில் பல்வேறு நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதற்காகவும் 140 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வனத்துறை வளர்ச்சிக்காகவும் வனத் துறையின் பல்வேறு திட்டங்களுக்காகவும் ரூ.191 கோடி ரூபாய் தமிழக அரசால் செலவிடப்பட இருக்கின்றது. .

**TNPSC**

விளம்பர எண்: 34/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 29.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**1. தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் பணியில் எட்டு கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர்** (Assistant Director of Handlooms and Textiles)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000

| | | | |
|---|---|---|---|
| (ஆதிதிராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | - | 1 | (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | - | 2 | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | - | 2 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| பகிரங்கப் போட்டி (ப.போ.) | - | 3 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** A degree in Textile Technology

or

A degree of M.Com., or M.A., with Economics as the main subject or M.Sc. with Mathematics as the main subject. Provided that other things being equal preference shall be given to the holders of the Textile Technology degree.

**2. தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியில் பத்து தொழிற்சாலை ஆய்வாளர்** (Inspector of Factories)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000.

(ஆ.தி.வ./ப.வ. - 2, மி.பி.வ./சீ.ம. - 1 (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பி.வ. - 3, ப.போ. - 4 (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

**தகுதி:** A degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

**3. தமிழ்நாடு மருத்துவப் பணியில், சென்னையிலுள்ள ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையத்தில் ஒரு பேச்சு மற்றும் கேட்புரை சிறப்பறிஞர்** (Speech and Hearing Specialist, Institute for Rehabilitation of Speech and Hearing handicapped, Madras)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்வுக்குப் பொருந்தாது)

**வயது:** *1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).*

**தகுதி:** (i) A first class M.Sc., degree or M.Sc., degree with 'O' or 'A' grade in Speech and Hearing with Electronics and Acoustics as Elective Subjects from the All India Institute of Speech and Hearing, Mysore or from any other University or Institution; and recognised by the University Grants Commission for the purpose of its grant.

and

(ii) Must have experience for a period of not less than two years, after acquiring M.Sc. degree in Speech and Hearing, as Research Fellow or Research Assistant or Research Associate or Speech Therapist or Audiologist in the Ear, Nose and Throat Department of any teaching Medical Institution affiliated to any University recognised by the University Grants Commission or in any research Scheme conducted in the Ear, Nose and Throat Department of the aforesaid Institutions.

**NOTE:** Provided that other things being equal, preference shall be given to released Emergency Commissioned Officers, released Short Service Commissioned Officers and other Ex-Servicemen.

*4. தமிழ்நாடு பொதுப்பணியில், **சமூக நலத்துறையில் 12 சிறார் மேம்பாடு திட்ட அலுவலர்/வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்*** (Child Development Project Officer/Taluk Project Nutrition Officer)
*(பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன).*

**சம்பளம்:** *மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,820-60-2,300-75-3,200*
*(ஆ.தி.வ./ப.வ - 2, மி.பி.வ./சீ.ம. - 2, பி.வ. - 3, ப.போ. - 5)*

**வயது:** *1.7.1990 அன்று 30க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).*

**தகுதி:** A degree in Social Work or Sociology

குறிப்பு: **அனைத்துப் பதவிகளுக்கும் பொருந்தும்.**

'Destitute Widows who possess the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., மற்றும் பி.வ. ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், **விளம்பர எண் மற்றும் இனத்தின் எண்** ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக் கூடிய 1.9.90 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.90 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாகக் கோரிக்கைகள் அனுப்ப வேண்டும். பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலை ஒவ்வொரு கோரிக்கையுடனும் அனுப்ப வேண்டும்.

**டிஐபிஆர்/2411/எம்எல்/90/அக்டோபர்**





# தொழில் வளத்தில் முதன்மைபெற

# முனைந்து நிற்கும் தமிழகம்

தொழில்வளத்தில் முதன்மைபெறத் தமிழ்நாடு முனைந்து நிற்கிறது; மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்கான அடிப்படை நடவடிக்கைகளாக- 15.9.90 முதல் 1.10.90 வரையில் தமிழ்நாட்டின் பல பாகங்களில் பல்வேறு தொழிற்சாலைகளைத் துவக்கி வைத்தார்; சில தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார். அவைபற்றிய நிகழ்ச்சி விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

### கப்பல் பழுது பார்க்கும் நிறுவனம்

**செ**ன்னையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15.9.90 அன்று, ஏறத்தாழ 80 கோடி ரூபாய் செலவில் சொக்கானி குழுவினர் உருவாக்கியுள்ள கப்பல் பழுதுபார்க்கும் நிறுவனத்தைத் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. உன்னிகிருஷ்ணன் திரு. உபேந்திரா, திரு. முரசொலி மாறன் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் திரு. துரைமுருகன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அந்நிறுவனத்தைத் துவக்கிவைத்துப் பேசுகை



◎ நமக்கு ஓர் அறிவு அதிகமிருந்தும் பயன் என்ன? மிருகங்களுக்கு ஓர் அறிவு குறைவு என்றாலும் சாதி இல்லையே! மிருகங்களுக்கு அறிவில்லாததன் பயன் சாதி இல்லை. நமக்குள்ள இழிவு சாதியால் தானே! இதைச் சிந்திக்க வேண்டாமா?

— தந்தை பெரியார்

யில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''800 கப்பல்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய வசதிகள் இருக்க வேண்டிய இந்தியாவில், 80 கப்பல்களைப் பழுதுபார்க்கிற வசதிகள் மட்டுமே இருக்கின்றன. இருப்பினும் தொடர்ந்து அதைப் பெருக்குகின்ற வகையிலேதான் இந்த முயற்சி இங்கே தொடங்கப்படுகிறது.

''இதன்மூலம் நேரடியாக 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டுகிறது, மறைமுக வேலை வாய்ப்பு 500 பேருக்குக் கிட்டுகிறது என்கிற போது, வேலைவாய்ப்புத் தேவையையும் ஓரளவு நிறைவு செய்கிறது இந்த நிறுவனம் என்கிற வகையில் என்னுடைய வாழ்த்துகளைச் சொக்கானி நிறுவனத்தாருக்குத் தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.''

## சிப்காட் தொழிற்பேட்டையின் இரண்டாம் பிரிவு தொடக்க விழா

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், 25.9.90 அன்று தருமபுரி மாவட்டம் ஓசூரில், சிப்காட் தொழிற்பேட்டையின் இரண்டாம் பிரிவைத் தொடங்கி வைக்கும் விழா. சீரும் சிறப்பு மாக நடைபெற்றது.

அவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள்- திரு. மு.கண்ணப்பன், திரு. எஸ். துரை முருகன், திரு. கே.என்.நேரு, திரு. க.பொன்முடி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொழில்துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப.,மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அலாவுதீன் இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித் தனர்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர் கள் பேசியதாவது:

''சிப்காட் எனப்படும் தமிழகத் தொழில் வளர்ச்சி நிறுவனம் 1971-ஆம் ஆண்டு தொடங் கப்பட்டது. ஓசூரைப் பொறுத்தவரையில் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியினால்- இந்த வளாகத்தில் அமைந்துள்ள பல்வேறு தொழில்களால் இந்த வட் டாரத்திலே ஏறத்தாழ இருபதாயிரம்பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

''சிப்காட் என்கிற இந்த நிறுவனத்தின் மூல மாக மட்டும் 720 நடுத்தர, பெரிய தொழில் பிரி வுகளைத் தொடங்க நிதியுதவியை இது வரையிலே வழங்கியிருக்கிறது. 31.8.90 வரையிலே தொழில் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டிருக்கிற குறித்த காலக் கடன்கள் 330 கோடி ரூபாயாகும். அதில், தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 76 தொழில் திட்டப் பணிகளுக்காக ஏறத்தாழ 33 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

''இந்த வளாகத்தை 1975-ஆம் ஆண்டு தொடங்கினோம் என்றாலும், இதற்காக இந்த வட்டத்திலே 1,235 ஏக்கர் நிலம் அரசால் கையகப் படுத்தப்பட்டது. அதில், அடிப்படை வசதிகளுக் காக நிலம் ஒதுக்கிய பிறகு, தொழிற்சாலைகளுக் காக ஏறத்தாழ 980 ஏக்கர் கொடுக்கப்பட்டது. அதிலே 131 தொழிற் பிரிவுகளுக்கு இதுவரை யிலே 976 ஏக்கரா நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால்தான், தமிழகத்தின் பின்தங்கிய பகுதி களில் தொழில்வளர்ச்சிக்காக நாம் மேற்கொண்ட முயற்சியால் இராணிப்பேட்டையைப்போல்- ஏன், அதைவிடச் சிறப்பாகக்கூட ஓசூர் இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை மெத்தப் பூரிப்போடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''ஓசூர் ஒரு டவுன் பஞ்சாயத்தாக இருக்கிறது. ஏறத்தாழ 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட ஓசூர் மிகவிரைவிலே ஒரு நகராட்சி மன்றமாக ஆக்கப்படும் என்கிற நல்ல செய்தியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

## சிப்காட் மின்னணு தொழில்வளாகம் அடிக்கல் நாட்டுவிழா!

**25.9.90** அன்று தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ஓசூரில் ரூ.400 கோடி முதலீட்டில் துவக்கப்படவிருக்கும் 'சிப்காட் மின்னணு தொழில் வளாகத்'திற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.துரைமுருகன் அவர்கள் தலைமையில்- தொழில் துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப., வரவேற்புரையுடன் துவக்கி வைக்கப் பட்ட இந்த மின்னணு தொழில் வளாகம் 976 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாகிறது. இதனைச் சார்ந்து 168 தொழிற்சாலைகள் இயங்கும்.

இதன்மூலம் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்று டி.வி.எஸ். நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டது. அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள், தரும புரியில் உள்ள காதுகேளாதோர் பள்ளிக்கு இல வசமாக வழங்கினார்.

## கணிப்பொறியால் இயங்கும் உற்பத்தித் தொழிற்கூடத் தொடக்க விழா

செங்கை அண்ணா மாவட்டத்தில் உள்ள துரைப்பாக்கத்தில்-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 26.9.90 அன்று கணிப்பொறியால் இயங்கும் உற்பத்தித் தொழிற்கூடத்தைத் தொடங்கி வைத்தார்; தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தொலைத் தொடர்பு பிரிவுக்கான யு.எச்.எஃப்., தொழிற்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு அமைச்சர்கள், டாக்டர் க. பொன்முடி, திரு. க.சுந்தரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மீ.அ. வைத்தியலிங்கம், திரு. இரா.பழனிச்சாமி, திரு. டி.ஆர்.பாலு எம்.பி., ஆகியோரும் - 'எலக்ட்ரோ ஸ்கேன் இந்தியா லிமிடெட்' நிர்வாக இயக்குநர் திரு. என்.எஸ். குமார்; தமிழ்நாடு மின்னணு நிறுவனத்(எல்காட்) தலைவர் திரு. எஸ்.அரவிந்த் இ.ஆ.ப., உள்ளிட்ட வர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்த தாவது:

''இந்த மின்னணுத் துறையிலே தனியாகச் சில சிறப்புச் சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. மற்ற துறையிலே தொடங்கப்படும் தொழில்களுக்கான முதலீட்டு மானியம் பின்தங்கிய பகுதிகளிலேதான் அறிவிக்கப்படுகிறது. ஆனால், மின்னணுத் துறையிலே ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கான முதலீட்டு மானியம் தமிழகத்தில் எந்த இடத்தில் அந்தத் தொழிலைத் தொடங்கினாலும் அளிக்கப்படும் என்கிற சலுகை வழங்கப்பட்டுள்ளது.

''மேலும், மின்னணுத் துறைக்காகக் கூடுதல் மானியம் அளிக்கப்படுகிறது. மற்ற தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியத்தினுடைய உச்ச வரம்பு 20 இலட்சம் ரூபாய் என்று இருக்கும் பொழுது, அதற்கு மாறாக, மின்னணுத் துறை மூலம் தொடங்கப்படும் தொழிலுக்கு 35 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இது மாத்திரமல்ல; இந்தத் தொழில்களுக்கு நீண்டகால வட்டி விகிதத்திலேகூட இரண்டு சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

''இதுபோன்ற தொழில்கள் எதிர் காலத்திலே அந்நியச் செலாவணியைப் பெருக்கும்; இறக்குமதி செய்துதான் சில உபகரணங்களை நாம் அடைய வேண்டும் என்ற நிலையைத் தவிர்க்கும். அந்த வகையிலே துவக்கப்படும் இந்தத் தொழிற்சாலைக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''



## இந்தியச் சுற்றுலா: ஒரு கணக்கீடு!

தொன்மையான கலாச்சாரமும் கலைச்சின்னங்களும் நிறைந்த பூமியாம் இந்தியாவுக்கு 1989-ஆம் ஆண்டில் வந்துசென்ற வெளிநாட்டுப் பயணிகள் எண்ணிக்கை 13,35,392. அதற்கு முந்திய ஆண்டைவிட இது 7.7 சதவீதம் அதிகம்!

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் 1987-88-இல் ரூ.1,890 கோடியும், 1988-89-இல் ரூ.2,100 கோடியும் சுற்றுலா மூலம் அந்நியச் செலாவணியாகக் கிடைத்தது. 1989-90-இல் இது ரூ.2,400 கோடியாக அதிகரிக்கும் வாய்ப்பிருக்கிறது.

சென்ற ஆண்டின் இறுதியில் சுற்றுலாத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட 647 ஓட்டல்களில் 42,415 அறைகள் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்பட்டன. முன்பே அங்கீகரிக்கப்பட்ட 288 புதிய ஓட்டல்கள் செயல்படத் துவங்கும்போது கூடுதலாக 10,605 அறைகள் பயணிகளுக்குக் கிடைக்கும்!

— ராஜு

## டால்மியா சிமெண்ட் நிறுவனப் பொன்விழா

டால்மியா சிமெண்ட் நிறுவனத்தின் (பாரதி) பொன்விழா, திருச்சியை அடுத்துள்ள டால்மியா புரத்தில் 30.9.90 அன்று நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். பொன்விழாச் சின்னம் ஒன்றைத் திறந்து வைத்தார். டால்மியா நிறுவனம் ரூ.45 இலட்சம் செலவில் துவக்கவிருக்கும் இராமகிருஷ்ண டால்மியா தொழில்பயிற்சி நிலையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

இப்பொன்விழா நிகழ்ச்சியில்- மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. கோ.சி.மணி, திரு. எஸ்.துரைமுருகன், திரு. கே.என். நேரு, திரு. டாக்டர். க.பொன்முடி ஆகியோரும், திரு. பழனியாண்டி எம்.பி., டால்மியா நிறுவனத் தலைவர் திரு. ஜயஹரி டால்மியா ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்விழாச் சிறப்புரையாற்றுகையில்- ஆண்டுக்கு ஏழு இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அந்த ஆலையின் பணியைப் பாராட்டினார். வருமானவரி, எக்சைஸ் தீர்வை மூலம் மத்திய அரசுக்கு ஆண்டுதோறும் இந்த ஆலை 16 கோடி ரூபாய் அளிப்பதையும், விற்பனை வரி, ராயல்டி மூலம் தமிழக அரசுக்கு 7 கோடி ரூபாய் தருவதையும் குறிப்பிட்டார். ''இதையெல்லாம் விட எனக்கு மகிழ்ச்சி தருவது, அந்த ஆலை 1,500 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பது தான்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## டாமின் தொழிற்சாலை விரிவாக்க அடிக்கல் நாட்டு விழா

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 'டாமின் கிரானைட்ஸ் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் டாமின் கிரானைட்ஸ் விரிவாக்கப் பணி'க்கு, செங்கை அண்ணா மாவட்டம் எர்ணாவூரில் 1.10.90 அன்று அடிக்கல் நாட்டி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பித்தார்.

டாமின் கனிம நிறுவனத்தின் தலைவர் திரு. கே.ஏ.சுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய இந்த விழாவிற்கு மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்.

திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் திரு. டி.கே.பழனிச்சாமி எம்.எல்.ஏ., மதுராந்தகம் திரு. சி.ஆறுமுகம், தொழில் துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப., இத்தொழிற்சாலையின் இயக்குநர் திரு. சசிசேகர் இ.ஆ.ப., ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. டி.ஆர்.பாலு எம்.பி., முதலான பலரும் இந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 4 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் படவுள்ள இந்தப் புதிய தொழிற்சாலையின் ரூ.4.65 கோடி செலவிலான விரிவாக்கப் பணிக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார். அப்போது அவர்- ''தொழில் வளர்ச்சியில் மூன்றாம் இடத்திலிருந்த தமிழ்நாடு பதினைந்தாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது; அதை மீண்டும் மூன்றாம் இடத்திற்கு அல்ல; முதலிடத்திற்கே உயர்த்த ஓயாமல் ஒழியாமல் இந்த அரசு பாடுபடும்'' என்று குறிப்பிட்டார். ''இந்த கிரானைட் நிறுவனத்தில் 1979-80-ஆம் ஆண்டில் ரூ.24 இலட்சத்திற்கு விற்பனை நடந்திருக்கிறது. இதே தொகை ஆளுநர் ஆட்சிக் காலத்தில் 10.72 கோடியாக உயர்ந்தது. அது 89-90-ஆம் ஆண்டில் 14 கோடியாக உயர்ந்து, நடப்பு ஆண்டில் 19 கோடியை எட்டியிருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள வீடிழந்த, 195 மீனவர்களுக்கு மாற்றிடம் தருவதற்காக அரசால் கையகப்படுத்தப்பட்ட ரூ.23 இலட்சம் மதிப்புள்ள 3 ஏக்கர் நிலத்தை விலையில்லாமலே தருவதென அரசு முடிவெடுத்திருந்தது. அந்த ஒதுக்கீட்டுக்கான பட்டாவையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்விழாவில் வழங்கினார்.

— நிகழ்ச்சிகள் தொகுப்பு:
**பி.எல். ராஜேந்திரன்**



### அம்பேத்கர் நூற்றாண்டு

★ சுயமரியாதையற்ற நிலையில் வாழ நினைப்பது மிகப் பெரிய அவமானமாகும். ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் மிக அவசியமான ஓர் அம்சம் சுயமரியாதை. சுயமரியாதையோடு நாம் ஒவ்வொருவரும் நெஞ்சை நிமிர்த்தி வாழவேண்டும். பிறந்தவர் இறப்பது உறுதி. யாரும் அடிமையாகப் பிறக்கவில்லை. நாம் ஒரு வீர பரம்பரையைச் சார்ந்தவர்கள். இதை ஒரு போதும் மறவாமல் இருக்க வேண்டும்.



# மீனவ சமுதாயத்தார்க்கு மேலான வாழ்வு!

மாண்புமிகு கால்நடைப்பராமரிப்புத்துறை அமைச்சர்
**டாக்டர் க. சந்திரசேகரன்**

**கோ**டையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர் தருவாக... தருநிழலாக... நிழல் கனிந்த கனியாக... ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராக... உகந்த தண்ணீரிலே மலர்ந்த மணமலராக... மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக... மென்காற்றில் விளை சுகமாக... சுகத்திலுறும் பயனாகத் தமிழகத்து மக்களுக்குக் கிடைத்திருப்பது தலைவர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழகத்தின் பொற்கால அரசாகும்.

சமூகத்தில் நலிவுற்ற பலதரப்பு மக்களும் பயன டையும் வகையிலே திட்டங்கள் பலவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருவது உள்ளங்கை நெல்லிக் கனி.

குறிப்பாக மீனவ சமுதாய மக்களின் மேம்பாடு கருதி, தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற மேலான திட்டங்கள்- உப்புக் காற்றையே சுவா சித்து உயிர் வாழும் அவர்கள் இதயத்திலே உவகை தேக்கி வருகின்றன.மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் மீனவ மக்கள் நலத் திட்டம் பற்றி- ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல என்று கேட்டு நிறுத்தி விடாமல் விளக்கமாக விவரிப்பது- மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அமைச்சர் அவையிலே அங்கம் வகிக்கும் அத்துறை அமைச்சரான எனது கடமையாகும்.

**மீனவருக்கு இலவச வீடுகள்:**

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நாளொரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. அதன் அடிப் படையில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரவேண்டியதன் அவசியம் அறிந்து, மீன்துறை யின் மூலம் 3,000 வீடுகள் கட்ட ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது. இதில் செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சினாங்குப்பம் மீன வர்களுக்கு ரூ.1.16 கோடியில் 492 அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டமும் அடங்கும்.

இம்மாதிரி மீன்துறையில் மீனவர்களுக்காக அடுக்கு மாடிக்கட்டிடம் கட்டுவது தமிழகத்தில் இதுவே முதல் தடவை. 1989-90-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டத் திற்காக மட்டும் மொத்தம் ரூ.488.52 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

அரசின் மேற்கண்ட முயற்சியின் தொடர்ச்சி யாகக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்துறை யானது, 5.6.90-இல் மேலும் 3,000 வீடுகள் ரூ.4.35 கோடியில் கட்ட ஆணைகள் வழங்கி யுள்ளது.

**விபத்தினால் இறந்த மீனவர்களுக்கு நிவாரணம் உயர்வு:**

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர் இல்லாத மீனவர்கள் விபத்தினால் இறந்தால், அவர்களுக்கு வழங்கும் நிவாரணத் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

தரிசாகக் கிடக்கும் அரசு உவர்நீர் நிலங்களில் இறால் வளர்ப்புச் செய்ய வேண்டி தனி நபர் களுக்கும், தொழில் முனைவோருக்கும் நிலம் வழங்கக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் துறை அரசாணையில் வழிவகைகள் அறிவிக்கப் பட்டன. உவர்நீர் நிலங்கள் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு கால்நடைப்பராமரிப்பு மற்றும் மீன்துறை அமைச்ச ரான எனது தலைமையில், ஓர் உயர்மட்டக்குழு தமிழக அரசால் நியமிக்கப்பட்டது.

1990-91 நிதி ஆண்டில் 5,000 ஏக்கர் உவர்நீர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட வேண் டும் என்ற இலக்கின் முதல் கட்டமாக 2,000 ஏக்கர் உவர்நீர் நிலப்பரப்பு பல்வேறு விண்ணப்ப






தாரர்களுக்குத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப் பட்டது. மீதமுள்ள நில ஒதுக்கீடு செய்ய விண் ணப்பங்கள் வரப்பெற்றுப் பரிசீலனையில் உள்ளன.

முன்னுரிமை விண்ணப்பதாரர்களாகவும் (Priority Sector) குறைந்த வருவாயில் இருப்பவர் களுமான ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீன வர்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள் ஆகியோரின் வருமானத்தைப் பெருக்குவதும் நாட்டில் இறால் உற்பத்தியைப் பெருக்குவதுமே இந்த உவர்நீர் இறால் வளர்ப்புத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.



**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**

தலைவர் கலைஞர் அவர்கள், முன்பு தமிழக முதல்வராக இருந்தபோதுதான், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்த மான நிறுவனமாக 1974-ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. இதில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூல தனம் ரூ.500 இலட்சமும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.293 இலட்சமும் ஆகும்.

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 8 நீர்த் தேக்கங்கள் உள்ளன. இவைகளில் மீன் உற்பத்தி ஆண்டொன்றுக்குச் சுமார் 500 முதல் 600 டன்களாகும். இதன்மூலம் கிடைக்கும் வருவாய், ஆண்டொன்றுக்கு ரூ.40 முதல் 50 இலட்ச மாகும். இந்நீர்த்தேக்கங்களில் அமைந்துள்ள மீன் குஞ்சுப் பண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்குச் சுமார் 700.00 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, இக்கழக நீர்த்தேக்கங்கள், அரசு நீர்நிலைகள் மற்றும் தனியார் மீன்பண்ணை களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

சென்னை இராயபுரத்தில் ஆண்டொன்றுக்கு 54 டன் எடையுள்ள மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலையில் தரமான மீன்வலைகள் தயாரிக்கப்பட்டு நாட்டுப்படகு, இயந்திரப் படகு மற்றும் ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களின் உரிமையாளர்களால் உபயோகிக்கப்பட்டு வரு கின்றன.

இறால் வளர்ப்போரின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆண்டொன்றுக்கு 16 மில்லியன்

அளவில் தரமான இறால் மீன்குஞ்சு உற்பத்தி செய்யும் பொருட்டு, சென்னை அருகில் உள்ள நீலாங்கரையில் இறால் மீன்குஞ்சுப் பொறிப்பகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களின் நன்மைக்காகச் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மீன்பிடித்துறைமுகங்களில் டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. அண்மையில், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு டீசல் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அப்பகுதி விசைப்படகு மீனவர் களின் தேவையை நிறைவு செய்து வருகிறது.

இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 90 மீன் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில், இக்கழக நீர்த்தேக்கங்களில் பிடிபடும் மீன்கள் மற்றும் கடற்கரை மீனவர் களால் பிடிக்கப்படும் மீன்கள் சுகாதாரமான முறையில் பொது மக்களுக்கு நியாயமான விலை யில் விற்கப்படுகின்றன.

இக்கழகம் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்கு விக்கும் பொருட்டு, இரு ஆழ்கடல் (23 மீட்டர்) மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகின்றன. அண்மையில் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின் பேரில், மேற்கு வங்க மீன் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மேலும் இரு நாவாய் கள் வாங்கப்பட்டு விரைவில் செயல்படவுள்ளன.

**முத்து வளர்ப்புத் திட்டம்**

''ஸ்பிக்'' உர நிறுவனமும் இக்கழகமும் கூட் டாக இணைந்து தமிழ்நாடு பேர்ள்ஸ் (பிரைவேட்) லிமிடெட் 1983-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, மூன்றாண்டுகள் செயல்பட்டது. தற்போது இக் கழகமே இம் முத்து வளர்ப்புத் திட்டத்தை 1.8.90 முதல் மண்டபத்தைத் தலைமையிடமாகக் கொண்டு நடத்தி வருகிறது. இதற்குத் தேவைப்படும் முத்துச் சிப்பிகள் தூத்துக்குடி கடல்பகுதிகளில் 'பார்' என்று சொல்லப்படும் முத்துச்சிப்பி நிலங்களி லிருந்து சேகரிக்கப்பட்டு, பின் அவைகள் மண்ட பத்துக் கடல்பகுதியில் அமைந்துள்ள முத்து வளர்ப்புப் பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப் பட்டு ''வளர்ப்பு முத்துகள்'' உற்பத்தி செய்யப்பட உள்ளது. வரும் ஆண்டுகளில் முத்துச்சிப்பி நிலங் களில் கிடைக்கும் சிப்பிகளை மட்டும் நம்பிக் கொண்டிராமல் பொறிப்பகம் அமைத்து, அதிலி ருந்து முத்துச் சிப்பிகள் உற்பத்தி செய்து, அவை களின் மூலம் தேவையான முத்துக்கள் உற்பத்தி செய்யத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

இவைகள் மட்டும்தான் என்பதல்ல; மீனவ சமுதாய மேம்பாடு கருதி, தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் இன்னும் பல இணையற்ற திட்டங்கள் மென்மேலும் செயல் படுத்தப்பட உள்ளன என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

பவானி கூடுதுறை



## சுற்றுலாக் காட்சிகள்



பிச்சாவரம்

# இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முன்னோடியாக விளங்கி வருகிறது.

கிராமப் பொருட்கள் உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடம் வகிக்கிறது. கதர் உற்பத்தியில் உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்து, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்களை வாரியம் 3 நிலைகளில் அமல்படுத்துகிறது.

அ) 1,230 வாரியத்தின் அலகுகள், ஆ) 1,604 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இ) 66,293 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்தல் ஆகியவையே அவை.

நடப்பு 1990-91-ஆம் ஆண்டில் 75,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திட வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான 2.10.90 அன்று இவ்வாரியம் கோபுரம் டிடர்ஜெண்ட் புதிய சோப்பினை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

பட்டு-பாலியஸ்டர் என்ற புதிய வகைத் துணியையும் வாரியம் அறிமுகப்படுத்தியது.

தமிழ்நாட்டில் பல்வேறு கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இவ்வாரியம் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து ரூ.19.37 கோடி நிதி பெற்றுள்ளது. எலக்டிரானிக்ஸ் தொழில், ஆபரணக் கற்களுக்குப் பட்டை தீட்டுதல், அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி செய்தல், சிலேட் உற்பத்தி, கற்பூரம், மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இப்பொழுது ஈடுபடுகிறது. இவ்வாண்டில் 2,000 தொழிற்கூடங்களை (Bunks) காலணி தொழிலாளர்களுக்கு வாரியம் இலவசமாக வழங்க உள்ளது.

நடப்பு ஆண்டில் 25 கதர் அங்காடிகளையும், காஞ்சிபுரத்தில் ஒரு பட்டு எம்போரியத்தையும் புதிதாக விரைவில் கதர் கிராமத் தொழில் வாரியம் திறக்க உள்ளது.

இந்த ஆண்டு நவராத்திரி கொலு பண்டிகை காலத்தில் 20.8.90-இல் ஆரம்பிக்கப்பட்ட பொம்மை விற்பனையில் 18.10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் தமிழ்நாடு அரசு கதர்த் துணிகளுக்கு 10% சிறப்புத் தள்ளுபடி அளிக்கிறது.

இந்தத் தீபாவளிப்பண்டிகைக்காலங்களில் ரூ.22.16 கோடி ரூபாய்க்குக்கதர்த் துணிகள் விற்பனை செய்திட வாரியம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

அண்ணல் காந்தியடிகளின் 122-வது பிறந்தநாளையொட்டி சென்னை குறளகத்தில் (காதி கிராப்ட்), மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பட்டு விற்பனையைத் தொடங்கி வைத்தார். முதல் விற்பனையினைத் திரைப்பட நடிகைகள் செல்வி அர்ச்சனா, செல்வி பல்லவி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (2.10.90)





# தமிழ் உணர்வை ஊட்டிய பெருமை வாய்ந்த பெருமகனார் சுந்தரனார்

## முதல்வர் கலைஞர்

''நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே இந்த மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் வருவதற்கு நீண்ட நெடிய நாள் முயற்சி நடை பெற்றது.

நம்முடைய நெல்லைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எல்.சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அது வைதீக வாசகமாக இருந்தாலும்கூட, எதுவும் நடைபெற நேரம் நன்றாக வேண்டும்என்பார்களே அதைப்போல வாய்த்துள்ள நேரம் நல்ல நேரமா? அல்லவா என்பதை அறிய, நல்லவை நடைபெற்றால் அதற்குப் பெயர் நல்ல நேரம் என்றும், அல்லாதவை நடைபெற்றால் அது நல்லநேரம் அல்ல என்றும், நாம் தீர்மானித்துக் கொள்கிறோம்.

இன்று இந்த நேரம் நல்ல நேரமா அல்லவா என்று கேட்டால், பஞ்சாங்கம் பார்ப்பவர்கள்கூட அதிலே வேறு ஏதாவது குறிப்பு இருந்தால், அதை மறந்து விட்டு, நல்ல நேரம் தான் என்பார்கள். காரணம் தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழை உலகத்தின் உச்சியிலே அமரவைத்து, 'உலக மொழிகளுக்கு ஈடாக மாத்திரமல்ல, அதனினும் மேலான ஒரு மொழி எமக்குண்டு, அந்த மொழியினுடைய மணம்-திலக வாசனை எல்லாப் பகுதியிலும் புகழ் மணக்க வீசுகின்ற வாசனையாகும், அந்த மொழிக்குப் பெயர் தான் தமிழ்மொழி. அந்த மொழி திராவிடத்திற்கு உரிய மொழி. திராவிடம் தெக்கணம் என்கின்ற பிறை நுதலில் அமைந்துள்ள திலகம் போன்றது. அந்த தெக்கணம் பரத கண்டம் என்ற வதனத்திலே ஒளிவிடக்கூடியது' என்று இப்படி அழகுபடுத்தி 'நீராருங்கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும் சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்' என்று தொடங்கிய வாழ்த்துப் பாடலைப் பாடியவர் மனோன்மணீயம் சுந்தரனார்.

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?''

—என்று பாவேந்தர் பாரதிதாசன் நீல வானத்தை ஆடையாக்கி அதை உடுத்திக் கொண்டிருக்கின்ற நிலாப் பெண்ணை உருவகப்படுத்தினார். ஆனால் 135 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து 42 ஆண்டுக் காலமே வாழ்ந்து மறைந்த, ஆனால் என்றும் மறையாத - தமிழினத்திற்குச்



பேராசிரியர் சுந்தரனாரின் திருவுருவச்சிலை

சொந்தக்காரரான மனோன்மணீயம் சுந்தரனார், 'நீராரும் கடலை உடையாக மாற்றி அதை நில மடந்தையை உடுத்திக் கொண்டிருக்கிறாள் என்று குறிப்பிட்டு, அந்த நிலமடந்தையினுடைய முகம் தான் பரத கண்டம் என்று குறிப்பிட்டு, அந்தப் பரத கண்டத்தினுடைய முகத்திலே இருக்கின்ற பிறை நுதல்தான் தெக்கணம் என்று சுட்டிக்காட்டி அந்தத் தெக்கணத்திலே இரு புருவங்களிடையிலே இருக்கின்ற திலகம்தான் திராவிடம் எனக்கோடிட்டு, அந்தத் திராவிடத்தினுடைய மொழிகளிலே முக்கிய மான மொழி, மற்ற மொழிகளையெல்லாம் உரு வாக்கிய தமிழ்மொழி என்று சிறப்பித்து, அதனு டைய மணம் உலகெங்கும் கமழ்கிறது' என்று புகழ்ந்தார்.

அந்த சுந்தரனாரைப் பற்றிக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள், ஒரு பாடலைப் பாடும்பொழுது, அவரைச் சித்திரமாக வரையலாம், ஓவியமாகத் தீட்டலாம், அவருக்கு நாமெல்லாம் ஆற்ற வேண்டிய கடமை அவருக்கோர் நினைவுச் சின்னம் அமைப்பதேயாகும் என்ற கருத்துப்படக் கவிதை எழுதினார்கள்.

தேசிக விநாயகம் பிள்ளை இன்றைக்கு இல்லை என்றாலும்கூட அவருடைய கருத்தை நிலை நாட்டுகின்ற வகையில்- நிறைவேற்றுகின்ற வகையில் தேசிக விநாயகம் பிள்ளையைத் தங் களுடைய கவிஞர்களாக இந்நாட்டினுடைய விடுதலை இயக்கத்திலே உள்ளவர்கள் கொண்டி ருந்தாலும், அவர் எல்லோருக்கும் சொந்தமான கவிஞர் என்ற அளவிலே அவரைச் சிறப்பிக்கின்ற நாங்கள் அவர் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை இன்றைக்குச் செயல் வடிவம்தந்து இந்த இடத் திலே நிறைவேற்றிக் காட்டி இருக்கின்றோம். அதுதான் ''மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்'' ஆகும். இதனை இன்றைக்கு ஒரு அரும் பும் பருவம் என்று குறிப்பிடுகின்ற சூழ்நிலை, வெகு விரைவில் இன்னும் இரண்டொரு ஆண்டு களில், மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் இங்கே தோன்றி மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களின் புகழைப் பாடத் தவறாது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய காலத்திலே கல்விக் கண் திறக்கப்பட்டது. ஆரம்பப் பள்ளிகள், சிற்றூர் தோறும் அமைந்திட வேண்டும் என்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படி தொடங்கப்பட்ட அந்தப் பெரும் முயற்சி ஆரம்பப் பள்ளியோடு நின்று விடக்கூடாது என்பதுதான், பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சிக்குப் பிறகு வந்த அறிஞர் அண்ணா அவர் களுடைய ஆட்சி, அண்ணாவைத் தொடர்ந்து நாங்கள் நடத்திய ஆட்சி ஆகியவற்றின் கருத் தாகும். 76-ஆம் ஆண்டு வரையில் கிராமப் பகுதி களிலே படித்த மாணவர்களுக்கெல்லாம் அந்தப் பகுதிகளிலேயே அவர்கள் சென்று பயிலக்கூடிய கல்லூரிகள் அமைய வேண்டும் என்கின்ற எண் ணத்தோடு பல கல்லூரிகளைக் கடந்த கால ஆட்சி யிலே நாங்கள் கண்டோம். அந்தக்கல்லூரிகளெல் லாம் இணைக்கப்பட்டுப் பல்கலைக் கழகங்கள் தோன்றின.

12-வது பல்கலைக் கழகமாக மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தோன்றுகின்றது. இந்த விழா நிகழ்ச்சியிலே அரசு விழா நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டு நலிந்த பிரிவினருக்கு நலத் திட்டங்கள் வழங்குகிற செயல்கள் நடைபெறுகின்றன.

எந்தவொரு தொகுதியும் இது ஆளும் கட்சித் தொகுதி, எதிர்க்கட்சித்தொகுதி என்று பேதம் பார்த்து இந்த அரசு செயல்படவில்லை என்பதை யும் நாங்கள் நடத்துகின்ற அரசு நிகழ்ச்சிகளில் எல்லாவற்றிலேயும், எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும், ஜனநாயகக் கடமையை அவரவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற அந்த அடிப்படை யிலேதான் அனைவரையும் அழைக்கிறோம்.

திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களை மற்ற இயக்கத்தார் பாராட்டினாலும் பாராட்டாவிட்டா லும் மற்ற இயக்கங்களிலே இல்லாத ஒரு மரபு, ஒரு அரசியல் பண்பாடு திராவிட இயக்கத்திற்கு உண்டு. அது ''மாற்றான் தோட்டத்து மல்லிகை யிலும் மணம் உண்டு'' என்று எண்ணுவதுதான். அப்படி நம்புவதுதான், அப்படி மதிக்கின்ற வகை யில் இன்றைக்கு இந்த அரசு யார் சொன்னார் கள்? என்பதை முக்கியமாகக் கருதாமல், என்ன சொன்னார்கள்? என்பதை முக்கியமாகக் கருதி அந்தப் பணிகளை நிறைவேற்ற தயங்காமல் செயல் பட்டு வருகின்ற அரசாகும்.

அப்படிப்பட்ட அரசின் பல்வேறு நற்செயல் களிலே ஒன்றாகத்தான் மனோன்மணீயம் சுந்தர னாரினுடைய பெயரால் இந்தப் பல்கலைக் கழகம் இங்கே தொடங்கப்படுகிறது.

மனோன்மணீயம்-சுந்தரனார் அவர்கள் படைத்த நாடகக்காவியம் , சிலப்பதிகாரத்திற்குப் பிறகு ஏற் பட்ட ஒரு பெரிய இடைவெளியை நிறைவு செய்த ஒரு காவியமாகும்.

அந்த நாடகக் காவியத்திலே வருகின்ற கதா பாத்திரங்கள் மிகமிக புதுமையான பாத்திரங்கள்; அதிலே வருகின்ற சீவகன் என்கின்ற பாண்டிய மன்னனானாலும், புருசோத்தமன் என்று சொல்லப் படுகின்ற சேர வேந்தனானாலும், பாண்டியனு டைய மகள் மனோன்மணியானாலும், அவளு டைய தோழி வாணியானாலும், அந்த மனோன் மணியைக் காதலிக்கின்றசேர மன்னன் புருசோத்தமன், அந்த நாட்டிலே சூழ்ச்சி வலை பின்னி ஆட்சியை அபகரித்துக் கொள்ள எண்ணுகின்ற குடிலன் ஆனாலும், அந்த குடிலனுடைய மகன் பலதேவ னானாலும் - இவர்களெல்லாம் மனோன்மணீயம் சுந்தரனாரால் உருவாக்கப்பட்ட அற்புதமான கதா பாத்திரங்கள்.

எவ்வளவு நன்றிப் பெருக்குடையவர் அதனு டைய ஆசிரியர் சுந்தரனார் என்பதற்கு, அவர் பயின்ற சாலையில் பல்வேறு அறிவுரைகளை, கருத்துரைகளை அவருக்குப் போதித்தவர் சுந்தர சாமியார் என்று ஒருவர் உண்மையிலே வாழ்ந் தவர். அவருடைய நினைவாகத்தான் மனோன் மணீயம் காவியத்தில் பாண்டிய மன்னருக்கு அறிவுரை கூறுகின்ற ஒரு முனிவராக சுந்தர முனிவர் என்கின்ற கதாபாத்திரத்தை மனோன் மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் படைக் கிறார்கள். இப்படி ஒரு அற்புதமான நாடகத்தை உருவாக்கிய பெருமகன், அவர்.

பேராசிரியர் எடுத்துக் காட்டியது போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாகப் பல்கலைக் கழக மாணவர்களிடையே பேச அழைக்கப்பட்டார். அழைக்கப்பட்டபோது மாணவர்கள் மத்தியிலே அமர்ந்தபோதுதான் என்ன தலைப்பிலே பேச வேண்டுமென்று அண்ணா கேட்டார். அங்கேதான் தலைப்பு தரப் பட்டது அவருக்கு. அதன்படி அண்ணா அவர்கள் 'ஆற்றோரம்' என்கின்ற தலைப்பிலே பேசினார்கள்.

அந்தத் தலைப்பு என்னென்ன செய்திகளை எல்லாம் நாட்டிற்குச்சொல்லிற்று, என்பதையெல் லாம் இன்னும் நான் மறந்திடவில்லை. ஆற்றோரம்- காவிரிக்கரை ஆற்றோரம், கங்கை ஆற்றோரம் என்ற இரண்டு ஆற்றோரங்களை ஒப்பிட்டு இந்த நாட்டினுடைய வரலாறு கங்கை ஆற்றங்கரையி லிருந்து தொடங்குகிறது தவறு; காவிரி ஆற்றி லிருந்து தொடங்கியிருக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். அதற்குச்சான் றாக அன்றைக்கு அவர் அழைத்துக் காட்டியவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைதான் இந்தக் கருத்தைப்பல ஆண்டுகளுக்கு முன்பு சொன்னவர். இந்திய நாட்டினுடைய வரலாறு உண்மையிலே தொடங்கப்பட வேண்டும் என்றால் அது தொடங் கப்பட வேண்டிய இடம் தமிழகத்திலே உள்ள தென்னகத்திலே உள்ள காவிரி ஆற்றுஓரமே தவிர கங்கை ஆற்றுஓரம் அல்ல என்று சுந்தரனார் குறிப் பிட்டார்.

இப்படிப் பெரும் புரட்சியைச் செய்து, தமி ழுக்கு ஈடான மொழி வடமொழியல்ல என்பதை எடுத்துக்காட்டி, இது வீழாத மொழி-அழியாத மொழி - என்றைக்கும் இளமை உள்ள மொழி என்கின்ற அதன் சீரைப்பாடி, சிறப்பைச் சொல்லி, நமக்கெல்லாம் தமிழ்உணர்வை அன்றுமுதல் இன்றுவரை ஊட்டிய பெருமை வாய்ந்த அந்தப் பெருமகனாருக்கு இந்தப் பல்கலைக் கழகத்தை நாம் உருவாக்கியிருப்பது ஒரு சாதாரண நன்றிக் கடனே தவிர பெரும்பணி என்று நான் சொல்ல மாட்டேன். அவர் ஆற்றிய பணிக்கு நம்மால் இயன்ற ஒரு சாதாரண நன்றியைத்தான் இன்றைக் குக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். இது தமிழர் களுடைய இன உணர்வை மேலும்மேலும் பெருக் கட்டும்; தமிழ் மொழிக்கு வளத்தைச் சேர்க்கட்டும். தமிழர்கள் உலகத்திலே சிறந்த குடிமக்கள் என் பதை விளக்கட்டும். அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் பணியாற்றட்டும். இந்தப்பல்கலைக்கழகத் தினுடைய பணிகள், அதற்கு ஏற்றவாறு வெற்றி யினைத் தரட்டும் என்று வாழ்த்துகிறேன்! விடை பெறுகின்றேன்.''

**—7.9.90 அன்று, திருநெல்வேலியில் உள்ள அபிஷேகப் பட்டியில், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைத் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து.**

---

**அம்பேத்கர் நூற்றாண்டு:**

## தீண்டாமை



★ தீண்டாமை என்பது சாதிக் கொடுமையிலிருந்து வளருகிற ஒன்று. எனவே, சாதியை ஒழிக்காமல் தீண்டாமையை ஒழிப்பதென்பது நடக்கக் கூடியதல்ல.

★ சாதிக்கொடுமை காரணமாகவே நம்மில் ஒரு சில திறமையுள்ளவர்களும் புறக்கணிக்கப்படுகின்றனர். நம் வீரதீரச் செயல்களும் சிந்தனைப் படைப்புக்களும் கூடப் புறக்கணிக்கப்படுகின்றன. இராணுவம், காவல் முதலிய துறைகளில் நாம் புகமுடியாமல் இருப்பதும் இக்கொடுமை யால்தான். நம்முடைய மானம் மரியாதைகளையெல் லாம் பறித்து, வாழ்வதற்கே லாயக்கற்ற ஜீவன்களாக நம்மை மாறிவிட்டது சாதி வேறுபாடுகள் என்கிற கொடுமை.

## மதுரை மாவட்டத்தில்...



# ஆதிதிராவிடர் நலத்துறையின் அரிய பணிகள்

மதுரை மாவட்டத்தில் 20 பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

உயர்நிலைப்பள்ளிகள்-2, நடுநிலைப்பள்ளிகள்-6, மற்றும் ஆரம்பப் பள்ளிகள்-12, இப்பள்ளிகளில் 4,615 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அனைத்துப் பள்ளிகளும் அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

மேற்குத்தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.20.84 இலட்சம் அரசினால் வழங்கப்பட்டு, பொதுப்பணித் துறையின் மூலம் குன்னூர், பொம்மிநாயக்கன்பட்டி ஆகிய பள்ளிகளுக்குத் துணைக் கட்டடங்கள் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. மற்றும் இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் கழிப்பறை, சுற்றுப்புறச் சுவர்கள் கட்டவும், ஜெயமங்கலத்தில் அரசு மாணவர் விடுதிக் கட்டடம் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 'தாட்கோ' மூலம் நான்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்குச் செயற்பொறியாளர் மூலமாக மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளன. அவை: 1. நாச்சிகுளம் உயர்நிலைப்பள்ளி, 2. பொம்மிநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளி, 3. அம்மச்சியாபுரம் நடுநிலைப்பள்ளி, 4. எலமனூர் நடுநிலைப்பள்ளி.

இம்மாவட்டத்தில் உள்ள மொத்த ஆதிதிராவிடர்களுக்கான மாணவ, மாணவியர் விடுதிகள் 52, வாடகைக் கட்டடத்தில் உள்ளவை 37; அரசு கட்டடத்தில் உள்ளவை 15 நடப்பு 1990-91-ஆம் ஆண்டில் மூன்று விடுதிகளுக்குக் கட்டடங்கள் மொத்தம் ரூ.57.77 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

தேனி மாணவியர் விடுதி ரூ.25.25 இலட்சத்திலும், கம்பம் புதுப்பட்டி விடுதி ரூ.19.00 இலட்சத்திலும், ஜெயமங்கலம் விடுதி ரூ.13.52 இலட்சத்திலும், இந்த மூன்று விடுதிகளின் கட்டுமானப் பணிகளை நடப்பு ஆண்டிலேயே முடிக்க, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குப் பல்வேறு துறைகளில் ஆர்வமும், ஈடுபாடும் மற்றும் வேலைவாய்ப்பும் ஏற்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ரூ.2.46 இலட்சம் ஒதுக்கீட்டில் கனிப்பொறி பயிற்சி 100 மாணவர்களுக்கும், 0.18 இலட்சம் ஒதுக்கீட்டில் சட்ட நிர்வாகப் பயிற்சி 2 மாணவர்களுக்கும், ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீட்டில் மருத்துவமனை நிர்வாகப் பட்ட மேற்படிப்பு 15 மாணவர்களுக்கும், ரூ.0.77 இலட்சம் ஒதுக்கீட்டில் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் பயிற்சி 25 மாணவர்களுக்கும், ரூ.0.93 இலட்சம் ஒதுக்கீட்டில் குளிர்சாதனப்பெட்டி பழுதுபார்க்கும் பயிற்சி 18 மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின் மூலம் பயன்பெறும் மாணவர்கள் தாமாகவோ அல்லது நிறுவனங்களிலோ தொழில்புரிந்து முன்னேற வாய்ப்புள்ளது.

தீண்டாமையினால் ஏற்படக் கூடிய சமூகக் கேடுகளைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்களில் தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 1987-ஆம் ஆண்டில் 46 கிராமங்களும், 1988-ஆம் ஆண்டில் 28 கிராமங்களும், 1989-ஆம் ஆண்டில் 77 கிராமங்களும் தீண்டாமை பரவியுள்ள கிராமங்களாக ஆக மொத்தம் 151 தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிதாக அமைக்கப்படும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு விரைவில் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும் என்னும் அடிப்படையில், இதற்காகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 1989-90-ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டங்களின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனிகளுக்கு ரூ.52 இலட்சம் செலவில் 17 விசைப்பம்புகளும், 75 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டில் ரூ.10.61 இலட்சம் செலவில் 5 விசைப்பம்புகளும், ரூ.2.15 இலட்சம் செலவில் 11 கைப்பம்புகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1989-90-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் காலனிகளில் 358 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் (1990-91) இது வரை 24 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 1989-90-ஆம் ஆண்டில் 1,480 குடிசைகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1990-91-இல் ஜூலைத் திங்கள் வரை 125 குடிசைகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றன.

இம்மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு மயானம்/மயானப் பாதை வசதி செய்து கொடுக்கும் பொருட்டு தனியார் நிலங்கள் கையகப் படுத்தப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் 7 காலனிகளுக்கு மயானம்/ மயானப்பாதை வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் (1990-91) 5 காலனிகளுக்கு மயானம்/மயானப் பாதை வசதி செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் 224 துணைச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இச்சுகாதார நிலையங்களில் அந்தந்தப் பகுதி வாழ்மக்களுக்கு வேறுபாடின்றி மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதில் 55 சுகாதார நிலையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக் வசிக்கும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்புத் திட்டம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஒரு ஆடு அலகு என்பது 20 பெட்டை ஆடுகள், 1 கிடா அடங்கியது ஆகும். இதற்கு ஆகும் செலவு ரூ.6,500/- என்று அரசினரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவில் 50 சதவிகிதம் மானிய மாக வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகள் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி கார்ப்பரேசன் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். பயனாளிகளில் 50 சதவிகிதம் பெண் பயனாளிகள் ஆவர். 1988-89-இல் 200 அலகுகள் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு 173 அலகுகள் வாங்கி வழங்கப் பட்டு விட்டன. இதற்கென அங்கீகரிக்கப்பட்ட மானியத் தொகை யான ரூ.7,83,400/-இல் இதுவரை 6,21,270/- விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அலகுகளை வாங்கி வழங்கிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## அம்பேத்கர் நூற்றாண்டு

★ ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனும் சிந்திக்கும் திறன் உள்ளவராகவும் கல்வியறிவு உடையவராகவும் திகழ்தல் வேண்டும்.

— டாக்டர் அம்பேத்கர்

பட்டு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் பெரிய குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த கைலாச பட்டி, வாய்க்கால்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் தலா ஒரு இலட்ச ரூபாய் செலவில் இரண்டு சமுதாயக் கிணறுகள் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 25 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடையும் வாய்ப்பு உள்ளது.

கறவை மாடுகள் வழங்கும் திட்டம், பால்வளத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாங்கும் கறவை மாடுகளின் கிரையத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.1067 இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக அளிக்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியத் தொகையின் மூலம் 1989-90-இல் 3,301 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன் அடைந்துள்ளனர்.

தொழிற்கூடங்கள் வழங்கும் திட்டம், காதி மற்றும் கிராமத் தொழில் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி செருப்பு தைக்கும் தொழிலுக்கும், தச்சுத் தொழிலுக்கும் கூடங்கள் அமைத்துத் தரப்படுகின்றன. இதன்மூலம் 1988-89-இல் 50 ஆதிதிராவிடர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.4.50 இலட்சம் அரசினரால் செலவிடப் பட்டுள்ளது. இதுதவிர கைக்குத்தல் அரிசி தயார் செய்தல், பாப்கார்ன் தயார் செய்தல் போன்ற சிறுதொழில்களுக்கும், நாவிதர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் தொகை இத்துறையினரால் வழங்கப்படுகிறது.

மக்கள் நலக்காடுகள் திட்டம், வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மத்திய அரசின் உதவியுடன் 5,000 கன்றுகள் உற்பத்தி செய்யக்கூடிய சிறுசிறு நர்சரிகள் அமைக்கப்படுகின்றன. பழவகைகள், தீவனச் செடிகள், எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் முதலியவை இம்மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்புடையவை என்று தெரிவு செய்யப்பட்டு, மதுரை, சோழவந்தான், உசிலம்பட்டி, கண்டமனூர் பகுதிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 20 ஆதிதிராவிடர் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

1989-90-ஆம் ஆண்டில் 10-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 60 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற 282 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய மாணவ/ மாணவியர்க்கு ரூ.300/- வீதம் ரூ.84,600/-க்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ/ மாணவியர் சுமார் 4,500 பேருக்கு மேல் நிலைக்கல்வியில் சிறப்புக் கட்டணத்தொகை மற்றும் தேர்வுக் கட்டணத் தொகை இவற்றைத் திரும்பப் பெறுவதற்கு ரூ.3,79,171/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாணவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட, பழங்குடி மாணவ/மாணவியர்க்குச் சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டத்தில் ரூ.49,000 பெறப்பட்டு, 16 மேல் நிலைப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தீவிர நடவடிக்கை காரணமாக, மாவட்ட நிர்வாகம் செய்து வரும் பணிகள், இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழ்வில் ஒளியேற்றும் என்பதில் ஐயமில்லை!

-ரெ.இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 50 ஆயிரம் அடுக்குமாடி வீடுகள் குடியிருப்போர்க்குச் சொந்தமாகும் என்று அரசு அறிவித்ததையொட்டி சென்னை 5-ஆவது வட்டத்தைச் சேர்ந்த மாநக ராட்சிக்குச் சொந்தமான இடத்தில் 40 ஆண் டாகக் குடியிருந்துவரும் 100 குடும்பங்கள் கொடுத்த விண்ணப்பத்தின்பேரில் அந்த இடத்தை அவர் களுக்கே சொந்தமாக்கித் தருமாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார் (14.8.90).

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் தென்னார்க் காடு மாவட்டத்தில் ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட் டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

★ தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் 50 இடங்களில் காற்றாடி மின் ஆலைகள் அமைக்கப் படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார் (20.8.90)

★ கொல்லிமலை சுற்றுலா மையமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு, அங்கு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகத் தங்கும் விடுதி கட்டும் பணி நடை பெற்று வருகிறது என்றும், அம்மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.7 இலட்சம் ஒதுக் கப்பட்டுள்ளது என்றும் சட்டப்பேரவையில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கே.பி. கந்தசாமி அவர்கள் அறிவித்தார் (20.8.90).

★ சென்னையில் பத்திரிகையாளர்க்கு வீடுகட்டும் திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்று சட்டப் பேரவை யில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு.கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார் (20.8.90).

★ பாளையங்கோட்டை நகராட்சியில் நவீனக் கட்டணக் கழிப்பிடம் கட்டத் தமிழக அரசு ரூ.97 இலட்சம் அனுமதித்துள்ளது என்றும், குடிநீர் விரிவுத் திட்டத்தை அரசு விரைவில் நிறைவேற்றும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் பாளையங்கோட்டை யில் தெரிவித்தார் (18.8.90).

★ நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்க் குக் கடந்த மே மாதம் எற்பட்ட ஒப்பந்தப்படி 1.1.90 முதல் திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (21.8.90).

★ செங்கை அண்ணா மாவட்டம் பனப்பாக்கத் தில் சித்த மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தேசிய சித்தா நிலையம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (21.8.90).

★ உணவு விடுதியில் பண்டங்களின் விலை குறைப்புக்காகத் தமிழக அரசு குழு ஒன்றை அமைத் துள்ளது. அந்தக் குழு தனது இறுதி முடிவில் தற்போது உள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் உணவுப் பண்டங்களின் விலை நிர்ணயம் செய்யப் பட்டு அறிவிக்கப்படும் என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அறி வித்தார் (22.8.90)

★ கால்நடையால் தாக்கப்பட்டு இறக்கும் விவசாயி குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் தெரிவித்தார் (22.8.90)

★ புதிய ரேஷன் கார்டுகள் வழங்கத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. உண்மையில் தேவைப் படுகிறவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் (23.8.90)

★ ஐரோப்பிய பொருளாதாரக் குழு நிதியுதவி யுடன் ரூ.10 கோடி செலவில் மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு.சந்திரசேகரன் அவர்கள் தஞ்சையில் தெரிவித்தார் (24.8.90).

★ எந்தக் குடும்பமாக இருந்தாலும் எந்தக் கட்சி யினருடைய குடும்பமாக இருந்தாலும் தனது குடும் பத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பிலுள்ள ஒரு வாலிபர் திடீரென்று கொல்லப்பட்டால், மனித நேய அடிப்படையில் அந்தக் குடும்பத்துக்குப் பாது காப்பு நிதியாக ரூ.10,000 வழங்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார் (23.8.90)

★ ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கான லைசென்சு இதுவரை காகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது. அதைச் சேதமுறாமல் பாதுகாப்பது ஒரு பெரிய வேலையாக இருந்தது. எனவே, இனி அந்த முறை மாற்றப்பட்டு, தொழிற்சாலைகளுக் கான லைசென்சு புத்தக வடிவில் வழங்கப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் இராணிப்பேட்டையில் தெரிவித்தார் (25.8.90).



# தந்தை பெரியார் ஒரு தீர்க்கதரிசி!

**—மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த அருமையான மையத்தை நாட்டிற்கு காணிக்கையாக்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளில் இந்த விழா நடைபெறுவது எல்லா வகையிலும் பொருத்தமான ஒன்று. மூட நம்பிக்கையில் ஆழ்ந்து கிடந்த சமுதாயத்தைத் தட்டியெழுப்ப வேண்டுமென்ற பேரார்வத்தோடு பெரும் புயலாகக் கிளம்பியவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்கள் சமுதாயத்திலே எல்லா பிரிவு மக்களுக்கும் சுயசிந்தனை, சுயமரியாதை - அவர்களுக்கு உரிய உரிமைகள் வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடியது மாத்திரமல்ல, வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்தில், உலகத்திலே பல்வேறு நாடுகளுடைய வளர்ச்சிக்கு ஈடாக நம்முடைய நாடும் இருந்திட வேண்டும். அமைந்திட வேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராக திகழ்ந்தார்கள். எனவேதான் அவருடைய பெயரால் இந்த அறிவியல் தொழில் நுட்ப மையம் அமைந்திருப்பது மிக மிகப் பொருத்தமுடையது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

1929-ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆடவரைப்போல பெண்களுக்கும் சொத்தில் சமஉரிமை தரப்பட வேண்டும் என்பதாகும். அதை அறுபதாண்டு காலத்திற்குப் பிறகு - கடந்த ஆண்டு தமிழக சட்டமன்றத்திலே சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்து அனைவருடைய ஏகோபித்த ஆதரவையும் பெற்று இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது என்றால் பெரியார் அவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற அறுபதாண்டு காலம் நமக்கு தேவைப்பட்டிருக்கின்றது.

எவ்வளவோ விஞ்ஞான அறிவு பெருகியிருந்தாலுங்கூட ஆரம்பப் பள்ளிக் கூடத்திலேயே உலகம் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது என்கின்ற பாடம் கற்பிக்கப் பட்டாலும்கூட, அந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள்-அந்தத் தெருவிலே இருப்போர் அதை நம்பத் தயாராக இல்லை என்பதை கிராமங்களிலே நம்மால் காண முடிகின்றது என்கிற போது, குழந்தைகளை, மாணவர்களை இது போன்ற அறிவு மையங்களிலே இந்தக் காட்சிகளைக் காண வைத்து மேலும் விளக்கங்களை அவர்களுக்கு அளிக்க நாம் இத்தகைய நிலையங்களைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

65 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார் அவர்களுடைய சொற்பொழிவு ஒன்று "இனி வரும் உலகம்" என்ற தலைப்பில் மிகச் சிறிய புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கின்றது. 60 ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஆண்டு எப்படியிருக்கும் என்பதை தந்தை பெரியார் அவர்கள் அன்றைக்கே ஒரு தீர்க்கதரிசியாக - அவர் பெரிய ஞானி என்ற அடிப்படையிலே அல்ல - முற்றும் சிந்தனையாளர் என்ற அடிப்படையில் — நடந்தவைகள், நடந்துகொண்டிருப்பவைகள், இனி நடக்கப் போகிறவைகள், நடந்தவைகளைக் கொண்டும், நடந்து கொண்டிருப்பவைகளைக் கொண்டும் இனி நடக்கப்போவது எப்படியிருக்கும் என்று அனுமானிக்கக் கூடிய பெரும் சிந்தனையாளராக - பேரறிவாளராக - பகுத்தறிவு சீயமாக - அவர்கள் விளங்கிய காரணத்தினால் 60 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்திருக்கிறார்கள்.

எனவே தான் தந்தை பெரியாரை நாம் தீர்க்கதரிசி என்கிறோம். எனவே தான் இந்த அறிவியல் மையத்திற்கு வேறு யாருடைய பெயரையும் சூட்டுவதற்கு பொருத்தமான பெயரல்ல, தந்தை பெரியாரின் பெயரைத்தான். ஆகவேதான் அந்தப் பெயர் இன்று சூட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த அறிவியல் மையத்தைப் பயன்படுத்திக் கொண்டு பயிற்சி பெறுகின்ற மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் தாங்கள் அந்த பயனைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கெல்லாம் அவர்கள் நடமாடும் பயிற்சி மையங்களாக மாற வேண்டும். பெரியவர்கள், கிராமப்புறத்திலே இருக்கின்ற பாமர மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும்."

**—பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து (17.9.90)**



# வாழ வைக்கும் வைரத் தொழில்

தமிழகம் மீண்டும் தொழில் வளர்ச்சியில் உயர் நிலையை அடைய, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாதம் ஒரு தொழிற்சாலையை உரு வாக்கி வருகிறார்கள். அந்த வகையில், திருச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1989) செப்டம்பர் திங்களில், சமயபுரம் அருகே உள்ள இருங்கலூரில் செயற்கை வைரத் தொழிற்பேட்டைப் பயிற்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

பம்பாயைச் சேர்ந்த வைரக்கற்கள் வளர்ச்சிக்கழகம், தென் இந்தியாவில் தமிழகத்தில் இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தை அமைக்க விரும்பியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சிப் பகுதியில் சுமார் 50 ஆண்டுக் காலமாகச் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 25,000 குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம், இத்தொழிற்சாலையைச் சமயபுரம் அருகிலுள்ள இருங்கலூரில் 10 ஏக்கர் நிலத்தில் அமைக்க அடிக்கல் நாட்டினார்.

தற்போது வெளிநாடுகளில் 'அமெரிக்கன் டைமண்ட்' என்று அழைக்கப்படும் செயற்கை வைரக்கற்களுக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. இவை ஒரே அளவு உள்ள தரமான கற்களாக இருக்கும். திருச்சிப் பகுதியில் இவ்விதச் செயற்கைக் கற்களை, கைத்தொழிலில் ரகப்படுத்துவதால் சரியான ஒரே அளவில் அதிகக் கற்கள் உருவாக்க முடியவில்லை. இதனால் இவற்றுக்குச் சரியான அளவில் வரவேற்பில்லை. வேலைக்கேற்ற வருவாயும் இல்லை.

தற்போது வைரக்கற்கள் வளர்ச்சி நிறுவனம் விலை உயர்ந்த இயந்திரங்களை வைத்து, கற்களை உடைத்து மெருகு ஏற்றுவதால், ஒரே அளவில் தரமான ''அமெரிக்கன் டைமண்ட்ஸ்'' என்று அழைக்கப்படும் செயற்கை வைரக்கற்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முன்பு நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை வருவாய் ஈட்டிக்கொண்டிருந்த கைவினைஞர்கள், தற்போது இந்தத் தொழிலில் பயிற்சி பெற்று வங்கிக் கடன் மூலம் இயந்திரங்கள் வாங்கி நாளொன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

செயற்கை வைரக்கற்கள் தொழிற்சாலையின் திருச்சி மண்டல நிர்வாகி திரு.மோதி அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:

''தற்போது உலக அளவில் இந்தியாவின் செயற்கை வைரக் கற்கள் ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம் என்ற அளவில் உள்ளது. நாம் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைத்து



கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் ஏற்றுமதித்திறன் இன்னும் 5 ஆண்டுகளில் ரூ.400 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது''.

''இதற்கு முறையான திட்டமும், பயிற்சியும் அவசியம். இதற்காக நாங்கள் திருச்சி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, இங்குள்ள சுமார் 25,000 குடும்பங்களுக்கு இன்னும் 5 ஆண்டு காலத்திற்குள் இப்பயிற்சியை அளிப்பதென முடிவு செய்தோம். அரசு இதற்காக எங்களுக்குச் சலுகை விலையில் நிலம் தந்து வரி விலக்கு அளித்து ஊக்கப்படுத்தியுள்ளது.''



இருங்கலூரில் தொழிற்சாலைக் கட்டடம் கட்டும் வரையில் காத்திராமல், செயற்கை வைரத் தொழில் கைவினைஞர் உடன் பயிற்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அரசு திருச்சி தியாகராஜ பாகவதர் மன்றம் பின்புறம் உள்ள கட்டடத்தை இலவசமாகப் பயிற்சி மையம் அமைய கொடுத்துள்ளது. நாளொன்றுக்குக் காலையில் 100 பேர், மாலையில் 100 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். கூடிய விரைவில் உலகச் செயற்கை வைரத் தொழிலில் தமிழகம் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடிக்கும் என நம்பலாம்.

**-எஸ். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி**

---

**பயன் அடைந்தோர் பகர்வன:**

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், 1989-90-ஆம் ஆண்டில் நிதியுதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 360 ஆகும். இவர்களுக்கு 18 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1990 ஏப்ரலிலிருந்து இது வரை 240 மகளிர்க்கு 12 இலட்ச ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கு இத்திட்டத்தின்கீழ், அரசு இம் மாவட்டத்திற்கு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. 6.8.90 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், 11 பேருக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.55,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

திருமதி இலட்சுமி
தன் கணவருடன்



திருமண நிதியுதவி பெற்ற கல்லல் ஊராட்சி ஒன்றியம் வெற்றியூரைச் சார்ந்த திருமதி இலட்சுமி என்பவர் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர், களை எடுத்தல், நடவுநடல் போன்ற விவசாயக்கூலி வேலைகளைச் செய்து வருகின்றனர். திருமதி இலட்சுமியுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் மற்றும் 4 சகோதரிகள்.

போதிய வருமானம் இல்லாமையால், திருமதி இலட்சுமியின் திருமணம் நடைபெறாமல் தள்ளிக் கொண்டே போயிற்று. எட்டாம் வகுப்பு வரை படித்திருந்த இவர், தையல் தொழில் தெரிந்தமையால் ஆண்டிற்கு ஒருமுறை பள்ளிச் சீருடைகளைத் தைத்துக் கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தைக் கவனித்து வந்தார். அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தைக் கேள்வியுற்ற இவர், அதற்கான முயற்சியில் இறங்கினார், அரசின் உதவியும் கிடைத்தது. திருமணமும் நல்லபடியாக நடந்தது.

''அரசின் இந்தச் சிறப்பான திட்டத்தினால், எங்கள் பெண்ணிற்கு வாழ்வு கிடைத்தது'' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தனர் இவரது பெற்றோர்கள்.

**ந. பாலையா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்,**

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



வெள்ளோட்டில் மகளிர் தையல் பயிற்சிக்கூடம்

**பெரியார் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளையும், செயல் திட்டங்களையும் நேரில் கண்டறிய, செப்டம்பர் 7,8 தேதிகளில் செய்தியாளர்கள் பயணம் மேற்கொண்டனர். இதற்கு, ஊரக வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்திருந்தது.**

**இம்மாவட்டத்தில் நடைபெற்றுவரும் நலத்திட்டங்களை விளக்குகிறது இக் கட்டுரை.**

பெரியார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை-எளிய மக்கள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் உயர தீவிர சுகாதாரத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், சாண எரிவாயுத் திட்டம், சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் முதலிய திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

### தீவிர சுகாதாரத் திட்டம்

தீவிர சுகாதாரத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்த செலவில் நவீனக் கழிப்பிடம் கட்டித் தருவதாகும். இத் திட்டத்தின் விளைவாகக் கிராமப் புறப் பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் நல்ல முறையில் அமைவதால், காலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றன. மனிதனின் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலை ஒழிக்கப்படுகின்றது. மேலும், பெண்கள் அநாகரிக முறையில், திறந்த வெளியில் பாதுகாப்பின்றிக் கழிக்கும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

இந்த முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மத்திய-மாநில அரசுகள் மற்றும் 'யூனிசெப்' நிறுவனம் ஆகியவற்றின் உதவிகளுடன் பெரியார் மாவட்டத்தில் இத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் கழிப்பிடங்கள் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தினாலே போதும் என்ற வகையில், வடிவமைக்கப்படுவது ஒரு சிறப்பாகும். இதனால், தண்ணீர் வசதி அதிகம் இல்லாத இடங்களிலும் இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டிக் கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு கழிப்பிடமும் 1,600 ரூபாய் செலவிலேயே கட்டப்படுகின்றது. இதில் 1,280 ரூபாய் அரசு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 320 ரூபாய் மட்டுமே கழிப்பிடம் கட்டிக் கொள்பவரின் பங்காகப் பெறப்படுகிறது.

1989-90-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் 10,000 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டில், 15,000 கழிப்பிடங்கள் கட்டப்பட உள்ளன. இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கென, பெரியார் மாவட்டத்தில் அலுவலர்களுக்கும் ஊராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

புதுப்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 88 வீடுகள் உள்ளன. இவற்றில் சென்ற ஆண்டு முடிய தொகுப்பு வீடுகள் மூலம் 45 கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. நடப்பாண்டில் 40 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 கழிப்பிடங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் இக்குடியிருப்பில் 100 விழுக்காடு வீடுகளிலும் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் சொந்தமாகத் தொழில்கள் தொடங்கவும், ஊதிய அடிப்படையில் வேலை வாய்ப்பினைப் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 35 நபர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மின்விளக்குகளைப் பழுதுபார்த்தல், தையல், இருப்புக் கடைசல் வேலை செய்தல், மோட்டார் ரிவைண்டிங் செய்தல், வானொலிப் பெட்டி பழுதுபார்த்தல், பற்ற-வைப்பு போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.250/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் அவர்களுக்கு ரூ.500 மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படுகின்றன.

1979-80-ஆம் ஆண்டுமுதல் 1989-90-ஆம் ஆண்டுவரை கிராமப் புறங்களில் படித்த இளைஞர்களுக்கென இத்திட்டத்தின் கீழ் ரூ.2,258.19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில், 13,961 இளைஞர்கள் பயிற்சி பெற்று அவர்களில் 2,406 பேர்கள் சுயமாகவும் 4,752 பேர்கள் ஊதிய அடிப்படையிலும் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்.

பவானி ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள தொழில் அலகில், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வேலை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப் படுகின்றனர். இங்கு அரசு, அரசு டைமையாக்கப்பட்ட பொது நிறு வனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வேலை உத்தரவுகள் பெறப்பட்டு, கட்டிடங்களுக்குத் தேவையான இரும்புத் தூண்கள், சன்னல்கள், கதவுகள், சாண எரிவாயு டிரம் போன்ற பொருட்கள் தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத் தின் மூலம், ஏழைப் பெண்களுக் கும், விதவைகளுக்கும் கணவனால் கைவிடப்பட்டவர்க்கும் தொழில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு, அவர் களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படுகிறது. இவர்களுக்கு மானியத் துடன் கூடிய கடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு வட்டாரத்திலும் 15 முதல் 20 பெண்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ் வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.15,000 வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ், மகளிர் மேம்பாட் டிற்குத் தேவைப்படும் பால் உற் பத்தி, பாய் நெசவு, நூல் நூற்பு, சாம்பார் பொடி தயாரித்தல், தையல் வேலை போன்ற தொழில்கள் செய்யப் படுகின்றன.

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் நோக்கம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பற்ற மற்றும் பகுதி நேர வேலையிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவதும், அதன் மூலம் நிலையான சமுதாயச் சொத்துக்களை உருவாக்கு வதுமாகும். இத்திட்டப் பணிகளுக் கான மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக் காட்டினை மத்திய அரசும் 20 விழுக்காட்டினை மாநில அரசும் ஏற் கின்றன.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத் தின்கீழ், ஆதிதிராவிடர்க்கும் பழங் குடியினர்க்கும் தொகுப்பு வீடுகள் கட்டுதல், ஊராட்சி மற்றும் பேரூ ராட்சி மன்ற அலுவலகக் கட்டி டங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டி டங்கள் கட்டித்தருதல், சாலைகள் அமைத்தல், குடிநீர்த் தொட்டிகள் கட்டுதல், பாலங்கள் அமைத்தல், சாக்கடைகள் அமைத்தல், வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரியார் மாவட்டத்தில் நடப் பாண்டில் ரூ.269.802 மதிப்பீட் டில் 1,900 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கான்கிரீட் கூரையுடன் அமைக்கப்பட்டுள்ள ஒவ் வொரு வீட்டிற்கும் ரூ.14,200 ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் இலவச மின்வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. இலவசக் காப்பீட்டு வசதியுடன் அமைக்கப்படும் இத்தொகுப்பு வீடு களுக்குத் தேவையான குடிநீர், தெரு விளக்கு, தெருக்கள், சாக்கடைகள் போன்ற அடிப்படை வசதிகள்




குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம்

ஊராட்சி ஒன்றியத்தால் செய்து கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் புகையில்லா அடுப்பும் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் இதுவரை 11,451 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் 6,787 வீடுகளுக்கு இலவச மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து வீடுகளுக்கும் இலவச குடிசை விளக்குத் திட்டத் தின்கீழ், வரும் ஆண்டுகளில் மின் இணைப்பு வழங்கப்படும்.

நஞ்சப்ப செட்டி புதூரில் 25 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 25 தொகுப்பு வீடுகள் ரூ.2,495 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக் கப்பட்டுள்ளன. 25 வீடுகளிலும் புகையில்லா அடுப்புகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒரு அடுப்பின் விலை ரூ.57. அதில் அரசு மானியமாக வழங்குவது 52 ரூபாய்.

இம்மாவட்டத்தில் 342 ஊராட்சி களும் 64 பேரூராட்சிகளும் உள்

பவானி ஊராட்சி ஒன்றியத் தொழிலகம்





**நஞ்சப்பசெட்டி புதூரில் ஆதிதிராவிடர்க்குக் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள தொகுப்பு வீடுகள்.**

ளன. இவற்றில் 179 ஊராட்சிகளும் 53 பேரூராட்சிகளும் சொந்தக் கட்டிட வசதி கொண்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 72 ஊராட்சிக் கட்டிடங்கள் ரூ.57.85 இலட்சம் மதிப்பீட்டிலும், 8 பேரூராட்சிக் கட்டிடங்கள் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 91 ஊராட்சிகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு, ஊராட்சி அலுவலகக் கட்டிட வேலையானது தன்னிறைவு பெறும்.

பெரியார் மாவட்டத்தில் 21 பள்ளிகள் ஒரு கட்டிடம் கூட இல்லாமல் உள்ளன. இப்பள்ளிகள் அனைத்திற்கும் நடப்பாண்டில் ரூ.27.815 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் இம்மாவட்டத்தில் முதன்மைக் கட்டிட வசதி இல்லாத பள்ளி ஏதுமில்லை என்ற நிலை ஏற்படவுள்ளது.

பவானி ஒன்றியத்திலுள்ள 152 பள்ளிக் கட்டிடங்களில், முதல் கட்டமாக 47 பள்ளிக் கட்டிடங்களைப் பழுது பார்க்க ரூ.3.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அவற்றில் 42 பள்ளிக் கட்டிடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 பள்ளிக் கட்டிடங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜம்பை என்னும் கிராமத்திலுள்ள 4 பள்ளிக் கட்டிடங்களில் 3 கட்டிடங்கள் ரூ.29,500 மதிப்பீட்டில் பழுது பார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 2 கட்டிடங்கள் ரூ.15,000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 1 பள்ளிக் கட்டிடத்தில் பழுது பார்க்கும் வேலை ரூ.14,500 செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இம்மாவட்டத்தில் பேருந்துகள் செல்லும் சாலைகள் அனைத்தும் தார் சாலைகளாகவும், கப்பி சாலைகளாகவும் போடப்பட்டு வருகின்றன. இவற்றில் முதல் கட்டமாக 155.8 கி.மீ. நீளமுள்ள 119 சாலைகள் ரூ.99.89 இலட்சம் செலவில் கப்பி சாலைகளாகவும் 144.3 கி.மீ. நீளமுள்ள 122 சாலைகள் ரூ.184.215 இலட்சம் செலவில் தார் சாலைகளாகவும் போடப்பட்டு வருகின்றன. மீதமுள்ள சாலைகள் வரும் ஆண்டில் முடிக்கப்படும்.

ஜீவன்தாரா கிணறு குறைந்தது ஒரு எக்டேர் நிலம் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர்க்கு வெட்டிக் கொடுக்கப்படுகிறது. இக்கிணறு வெட்ட ரூ.28,000-க்கு மிகைப்படாமல் அரசு மானியம் வழங்குகிறது. மேலும், இக்கிணற்றில் ஆயில் என்ஜின் அல்லது மின் மோட்டார் அமைத்துக் கொள்ளவும் வங்கிக் கடனுடன் அரசு மானியமும் வழங்கப்படுகிறது.

1988-89-ஆம் ஆண்டில் 170 கிணறுகளும், 1989-90-ஆம் ஆண்டில் 100 கிணறுகளும் பெரியார் மாவட்டத்தில் வெட்டப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் விவசாயத்திற்கு இக்கிணற்று நீர் பெரிதும் பயன்படுகிறது.

### சாண எரிவாயுத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் விவசாயிகள் பெரும்பாலோர் கால் நடைகள் வைத்துள்ளனர். இக்கால் நடைகளின் மூலம் கிடைக்கக் கூடிய சாணத்தைக் கொண்டு எரிவாயுக் கலன்கள் உதவியால் எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயத்

**ஜம்பை பேரூராட்சிப் பகுதியிலுள்ள சாண எரிவாயுக் கலன்.**





தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், நாடகத் தலைமை ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் இசைப்பாட்டுப் புலவர் பாபநாசம் சிவன் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம், துணைத் தலைவர் திரு. கே.ஏ.தங்கவேலு ஆகியோர் உடன் உள்ளனர் (3.10.90).

தில் ஆயில் என்ஜின்களுக்குத் தேவையான எரிசக்தியாகப் பயன் படுத்தப்படுகிறது. இதனால், 50 விழுக்காடு டீசல் எரிபொருள் மீத மாகிறது. இதுதவிர, வீட்டில் விளக்கு எரிய வைக்கவும் சமையல் அடுப்பு, தண்ணீர் சூடாக்கும் கருவி ஆகிய வற்றிற்கும் இச்சாண எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. மேலும், இதில் பயன்படுத்தப்பட்ட சாணம் நல்ல உரத்தன்மை உள்ளதாகவும் களைகள் வளர்வதைத் தடுக்கும் திறன் கொண்டதாகவும் காணப்படு கிறது. பவானி ஊராட்சி ஒன்றியத் தில் 1981-82 ஆண்டு முதல் நாளது வரை 1,240 சாண எரி வாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள் ளன. ஜம்பை பேரூராட்சிப் பகுதி யில் மட்டும் 98 கலன்கள் இருக் கின்றன.

**சமூகக்காடு வளர்ப்புத் திட்டம்**

சமூகக்காடு வளர்ப்புத் திட்டத் தின்கீழ் இம்மாவட்டத்தில், நாற்றங் கால் வளர்ப்பு, வட்டார அளவில் மரம் நடுதல், சாலையோரம் மற்றும் கால்வாய் அருகில் மரம் நடுதல், ஆதிதிராவிடர் குடியிருப்பில் மரம் நடுதல் போன்ற பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நடப்படும் செடிகளைப் பாதுகாக்கக் கூடிய நிலையில் உள்ள நிறுவனங் களிலும் சமூகக்காடுகள் வளர்க்கப் படுகின்றன.

**வறட்சி நிவாரணத் திட்டம்**

பெரியார் மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 248 ஆழ் குழாய்க் கிணறுகள் ரூ.62.00 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப் பட்டு, அவற்றில் 166 ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.41.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 82 ஆழ்குழாய்க் கிணறுகள் இன்னும் சில நாட்களில் முடிக்கப் பட உள்ளன.

மேலும், ஏற்கனவே உள்ள குடி நீர்த் திட்டங்களைப் பழுதுபார்க்கும் நோக்கத்தில் காங்கேயம் மற்றும் அந்தியூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பழுது பார்க்க ரூ.23.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் நிலையில் உள்ளன.

—தே. மணி




வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
விஜய்
UREA-N46%
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
HTA 7343



# நூல் நயம்

## கலைஞரின் கனிவுரைகள்

**ஆசிரியர்:பி.எல்.ராஜேந்திரன்**

**வெளியீடு:**

கற்பகம் புத்தகாலயம்,
59, ஆடம் தெரு, சென்னை-600 004.

விலை:ரூ.9 பக்கம்:94

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆற்றிய சொற்பொழிவுகளின் கருத்து மணிகளே இந்நூல்.

இளைஞர்களுக்கு, பெண்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு, மணமக்களுக்கு, மருத்துவர்களுக்கு, எழுத்தாளர்களுக்கு ஆகிய தலைப்புகள் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துரைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

—பி.வி.ஜி.

## சிரிப்பும் சிந்தனையும்

**ஆசிரியர்: தங்கமணி**

**வெளியீடு:**

சந்துரு பதிப்பகம்
4, டாக்டர் நியமதுல்லா சாகிப்பு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

விலை:ரூ.8 பக்கம்:84

**கு**ழந்தைகளுக்காக எழுதப்பட்ட நூல்களில் இது சற்று வித்தியாசமான கருத்துக்களை, புதுமையான நடையில் எழுதப்பட்ட நூல்.

நகைச்சுவையுடன் குழந்தைகள் ரசிக்கும் படியாக உள்ளது.

-என். குமாரசாமி

## உயிர் காக்கும் வைட்டமின்கள்

**ஆசிரியர்: வி.என்.சாமி**

**வெளியீடு:**

தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ-19, டார்ன்புல்ஸ் சாலை,
முதல் குறுக்குத் தெரு,
நந்தனம், சென்னை-600 035.

விலை:ரூ.25 பக்கம்:215

**ஆ**ரோக்கியமான வாழ்வுக்கு வெறும் உணவு மட்டுமே போதுமானது அல்ல; திட்டமிட்ட உணவு மூலமே நாம் நல வாழ்வு பெற முடியும் என்பதை மருத்துவர்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

பற்றாக்குறை நோய்கள், தொற்று நோய்கள் ஆகியவை வைட்டமின்கள் குறைவினாலேயே ஏற்படுகின்றன. எனவே, இந்த வைட்டமின்கள் பற்றியும், அவற்றின் குறைவினால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைப் போக்கும் முறைகள் பற்றியும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது.

எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய வகையிலே, எளிய நடையில், எழுதப்பட்டுள்ளது. தக்க படங்களும் உள்ளன.

## ஊராட்சிகள்-பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் சட்டமும் நடைமுறையும்

**ஆசிரியர்: சு. புகழேந்தி**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை:ரூ.150 பக்கம்:1514

**ஒ**ரு நாட்டின் வளர்ச்சியை அளவிடுவதற்குக் கிராமங்களின் வளர்ச்சியே அடித்தளமாக அமைகிறது. இந்த வளர்ச்சிப் பணிகளுக்கு, ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை உறுதுணையாக இருக்கின்றன. இவற்றின் மக்கள் பிரதிநிதிகளாகப் பொறுப்பேற்கும் பெரியோர்களுக்கும், இளைய சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில், இந்நூல் விரிவாக-விளக்கமாக- தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பல பிரிவுகள் திருத்தப்பட்டு, புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இவற்றில் முக்கியமானவை 1.ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவைகளின் தலைவர்களுக்கான நேரடித் தேர்தல்கள் 2.பதினெட்டு வயதை அடைந்தவர்களுக்கு வாக்குரிமையை அளித்தல் 3.தேர்தல் குற்றங்களுக்கான தண்டனைகளை நிர்ணயம் செய்தல் 4.தல வரியின் மேல் வரியை இரண்டரை ரூபாய் வரை விதித்தல் ஆகியவற்றை முக்கியமானதாகக் கொள்ளலாம். இத்தகைய திருத்தங்களும், புதிய விதிமுறைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றில் பொறுப்பேற்பவர்கள் மட்டும் அல்ல, பொது மக்களும் கூட தெரிந்து கொள்ள வேண்டிய சட்டதிட்டங்களும், நடைமுறைகளும் இந்நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## வாசன் உயர்தர-தமிழ்க் கையகராதி

**தொகுப்பாசிரியர்கள்:**

**பேராசிரியர் வி. கணபதி**
**புலவர் இளஞ்செழியன்**
**தமிழாசிரியை க. சந்திரிகா**
**பதிப்பகச் செம்மல் க. கணபதி**

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு
சென்னை-600 014.

விலை:ரூ.15 பக்கம்:284

**மா**ணவ மணிகள் எளிதில் பொருள் விளங்கிக் கொள்ளும் வகையிலே இந்தக் கையகராதி தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆவுரிஞ்சி என்பதற்கு மந்தைக் கல், ஆதீண்டுகுற்றி என்பது பொருள். இது யாருக்கு விளங்கும்? ஆகவே யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், 'பசுக்களின் தினவு தீர்க்க உராய்வதற்காக அமைந்த கல்தூண்' என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

கைக்கு அடக்கமான இந்த அகராதியின் இறுதியில் தொகையகராதியும் இடம் பெற்றுள்ளது. அத்துடன் தேர்ந்தெடுத்த சில பழமொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளன

தரமான பதிப்பு; மாணவர்க்குத் தகுந்த அகராதி.

— பி.வி. கிரி

## அறிவியல் வேளாண்மைத் தொழில் நுட்பங்கள்

**ஆசிரியர்: தி. புருசோத்தமன்**

**வெளியிட்டோர்:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
41-பி. சிட்கோ இன்டஸ்ட்ரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

பக்கம்: 176 விலை ரூ.20/-

**வி**ளைச்சலைப் பெருக்கிடவும், உழவர்களின் வருவாயை உயர்த்தி அவர்கள் வளவாழ்வு காணவும் - வேளாண்மையில் அறிவியல் தொழில் நுட்பங்கள் புகுத்தப்படுவது முக்கியம். அத்துறையில் நூலாசிரியரின் நேர்த்தி மிக்க அனுபவத்தைக் காட்டுவதாக இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

— 'ராஜு'




"குறைந்த வருவாயாக இருந்தாலும் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்தால் செல்வம் வளர்ந்து பெருகும். விண்மீன்கள் ஒன்று கூடிநின்றால் இருள்நீங்கி உலகம் ஒளிபெறும். மழைத்துளிகளும் இடைவிடாது ஒன்று சேர்ந்தால் கடலைப் போல் மிகுந்த நீரைத்தரும். அதுபோல ஒருவனுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் நாள்தோறும் சோர்வில்லாமல் சிறிதளவு சேர்த்தால் செல்வம் பெருகும்."

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
  இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
  அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
  வளரும் மாத சேமிப்புத் திட்டம்

## மாவட்டச் சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90

ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன் (அரசு ஆணை எண்: 683, நிதித்துறை நாள் 19.6.90)

- 1.6.90 முதல் 31.12.90 வரை முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள்.
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்குச் சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

**சம்பளப்பட்டியல் திட்டத்தில் ரூ. 100/- சேமிப்பீர். 5 மாதம் சேமித்தபின் ஒரு பரிசுக்கூப்பன் பெற்றிடலாம். ரூ. 200/- சேமிப்பு. இரண்டு பரிசுக்கூப்பன்கள்! - வருமான வரிவிலக்குடன்!**

- மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை
- ரூ. 1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத் தொகை

DIPR/MS/90/ARIES

| | | |
|---|---|---|
| **சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.** | பரிசுக்கூப்பன்கள் **மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்.** | இயக்குநர் **சிறுசேமிப்புத்துறை,** 143, அண்ணா சாலை, சென்னை-600 002. தொலைபேசி: 840223/846209 |



# பட்டு விற்பனையில் பெரும் சாதனை!

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

## திரு. எஸ். தங்கவேலு

**கோ-**ஆப்டெக்ஸ் தமிழ்நாட்டிலுள்ள 1,600 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் பருத்தி, பாலியஸ்டர், பட்டு மற்றும் கலவை இழைகளில் தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளை இந்தியா முழுவதும் 471 விற்பனை நிலையங்கள் மூலம் பெரும் அளவில் விற்பனை செய்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.171.03 கோடிக்கு விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. இதில் ரூ.54.86 கோடி தீபாவளி '89-ன் போது விற்பனையாகி உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.135 கோடி அளவிற்கு விற்பனைக் குறியீடு நிர்ணயித்துள்ளது. இதில் ரூ.80 கோடி அளவிற்கு இவ்வாண்டு தீபாவளிக்கு விற்பனைக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### சிறப்புத் தள்ளுபடி

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 17.10.1990 வரை அனைத்து கைத்தறி இரகங்களுக்கும், அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது. இந்த 20 சதவீத சிறப்புத் தள்ளுபடியோடு, சில குறிப்பிட்ட இரகங்களுக்கு



மேலும் கூடுதலாக 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது.

அரசு ஊழியர்களுக்கும், அரசு பொதுத் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் மற்றும் இதர நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் பண்டிகைக் காலங்களில் கைத்தறித் துணிகளைக் கடனில் விற்பனை செய்து வருகிறது.

**பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையங்கள்**

கோ-ஆப்டெக்ஸ், சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, பெங்களூர், ஐதராபாத் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையங்களைத் திறந்து, வாடிக்கையாளர்களுக்கு வகை வகையான பட்டுத் துணிகளை வழங்கி விற்பனைத் துறையில் சாதனை புரிந்துள்ளது.

திருநெல்வேலியில் மிகப்பெரும் அளவில் ஒரு பகுதி பட்டு விற்பனை நிலையம் திறக்கப்பட்டு, சிறப்பாக விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும் நடப்பு ஆண்டில் தஞ்சாவூர், நாகர் கோவில், விருதுநகர், சிவகாசி ஆகிய இடங்களில் பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையம் திறக்கப் படவுள்ளது.

**தீபாவளிக்கு வரும் புதிய இரகங்கள்**

100 சதம் பாலியஸ்டர் இழைகளால் நெய்யப் பட்ட பாலியஸ்டர் சேலைகள் இந்தத் தீபாவளிக்கு மாதிரி விற்பனைக்கு வந்துள்ளன. இதனுடைய விலை ரூ.300 முதல் ரூ.380 வரை உள்ளது. இந்த வகையான சேலைகளை ஆலைகள்கூட தயாரித்தில்லை என்பதே, இந்தச் சேலைகளுக்கு உரிய பெருமையாகும்.

100 வகையான வடிவமைப்புகளில் இந்தத் தீபாவளிக்குப் பாலியஸ்டர் சேலைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

அத்துடன் 50 வகையான வடிவமைப்பில் பாலியஸ்டர் சட்டைத் துணிகள் மற்றும் பாலியஸ்டர் சூட்டிங் துணிகளும் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மதிப்பிற்குரிய திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர்களால் பாதுகாக்கப்பட்ட கலாஷேத்ரா சேலைகள் புதிய வடிவத்தோடு, உருவாக்கப்பெற்று, டெல்லியில் ஒரு சிறப்புக் கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக் கப்பட்டுள்ளன.

மேலும் கோடைக்காலத்தை முன்னிட்டு பருத்திப் புடவைகளின் கண்காட்சி ஒன்றும், வரும் ஆண்டு மார்ச்சுத் திங்களில் புதுதில்லியில் நடைபெறவிருக் கிறது. இக்கண்காட்சியில் 50 விதமான புதுவித இரகங்கள் வடிவங்களில் உருவான சேலைகள் இடம் பெறுகின்றன.

**பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்குதல்**

எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளிச் சிறார் களுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு 'கோ-ஆப்டெக்ஸ்க்கு' ஓர் உத்தரவு அளித்துள்ளது. பாவாடைக்கு நீலநிற 'கேஸ்மேண்ட்' துணி, கால் சட்டைக்கு காக்கி டிரில், வண்ணத் தாவணி துணிகள் மற்றும் சட்டைக்கும், ரவிக்கைக்கும் வெள்ளைத் துணி ஆகியவை இத்திட்டத்தில் வழங்கப்படும் கைத்தறித் துணி வகைகளாகும்.

**(சென்னையில் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் 26.9.90 அன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர் கூட்டத்தில் அளிக்கப்பட்ட செய்திகளிலிருந்து)**

உள்ளம் கவர் நூல்கள்

இயற்கை நுட்பங்களைக் கண்டறிந்து - மனித சமுதாயத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து இதம் தந்து, உலகை, புதியதாய், வசதியதாய் ஆக்கித் தரும் விஞ்ஞான வித்தகர்களின் வாழ்க்கை வரலாறுகளும், ஆராய்ச்சிகளும் இன்றைய நிலையில் சுவையும் பயனும் தந்து மக்கள் உள்ளத்தைக் கவரவல்ல அருமையான நூல்களாக அமைகின்றன.



**வாழும் நூல்கள்**

உலகம் அந்தந்தக் காலத்திற்கேற்ற நூல்களைத்தான் ஏற்றுக் கொள்கிறது. காலத்திற்கேற்ற முறையில் நூல்கள் மாறினாலும், இறந்த கால ஏடுகள் அனைத்தும் இறந்து விடுவதில்லை.

**—பேரறிஞர் அண்ணா**



# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்!

**— சுற்றுலாப் பயணிகளை மட்டிலா மகிழ்வடையச் செய்திடும் இடங்கள் பல, தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இந்தக் கட்டுரையிலே அழகுபட அணிவகுத்துள்ளன!**

சுற்றுலாப் பயணிகளின் மனதைச் சுண்டியிழுக்கத் தக்க கவர்ச்சிமிக்க சுற்றுலாத் தலங்கள் பல நம் தமிழகத்திலே உண்டு. இதனாலேயே இந்தியச் சுற்றுலா மண்டலங்களில் தமிழ்நாடு முக்கிய அங்கம் வகிக்கிறது.

எந்த ஒரு நாட்டிற்கு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தருகிறார்களோ, அந்த ஒரு நாடு அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும்; பொருளாதாரத் தன்னிறைவை இந்த வகையிலே எட்ட முடியும். அப்படியொரு பெருமையை மிக விரைவிலேயே அடையவிருக்கிறது நம் நாடுஎன்றால் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

அயல்நாட்டுப் பயணிகள் கண்டு அகமகிழத் தக்க-கோயில்கள், கட்டடக் கலைகள், சிற்பச் சிறப்புகள், நினைவுச் சின்னங்கள், மலை நகரங்கள், வனவிலங்குச் சரணாலயங்கள், கவின் மிகு கடற்கரைப் பகுதிகள் நம் தமிழகத்தில் இருப்பதுபோல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

தனிப்பெருமை உண்டாக்கும் வகையில், தமிழ்நாட்டில், அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிக் கிடக்கும் இயற்கைத் தாயின் எழிலை, ஆற்றலாளர்களால் படைக்கப்பட்ட அழகின் சிரிப்பை- காலத்தால் அழியாத கண்கவர் இடங்களின் வனப்பை மாவட்ட வாரியாகத்தான் கொஞ்சம் நாம் பார்ப்போமே!

தமிழகத்தின் தலைநகரமாம் சென்னை- உலகிலேயே மிக நீளமானதெனும் சிறப்புமிக்க அழகிய கடற்கரை நகரமாக அமையப் பெற்றதாகும். கந்தகோட்டம், கபாலீச்சுரம், பார்த்தசாரதி திருக்கோயில் போன்ற ஆலயங்கள் மட்டுமல்ல; வள்ளுவர் கோட்டம், வண்டலூர் உயிரியல் பூங்கா, பெருந்தலைவர் காமராசர், மூதறிஞர் ராஜாஜி, அண்ணல் காந்தியடிகள், அறிஞர் அண்ணா போன்றோரின் நினைவிடங்கள், பிர்லா கோளரங்கம், கன்னிமரா நூலகம், மியூசியம், அண்ணா அருங்காட்சியகம் எனக் காணத்தக்க இடங்கள் கணக்கிலடங்காது சென்னையிலே!

அடுத்து செங்கை-அண்ணா மாவட்டத்திற்குச் செல்வோமானால் - திருக்கழுக்குன்றத்தைத் தாண்டி, தென்னகச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மாமல்லபுரம் மறக்க முடியாத ஒன்று.



'மனோரா' உப்பரிகை



வீரபாண்டியக் கட்டபொம்மன் கோட்டை

பல்லவ மன்னன் நரசிம்மவர்மனால் (கி.பி. 600-630) உருவாக்கப்பட்ட சிற்பச் சிறப்பை-குறிப்பாக, உலகில் வேறெங்கும் இல்லாதபடி 80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஒரே பாறையில் அமைக்கப்பட்ட செதுக்கோவியத்தை, ஒப்பற்ற குகைக்கோயில்கள் ஒன்பதை, கண்வழி புகுந்து கருத்தினில் கலக்கும் கடற்கரைக் கோயிலை அங்கே நாம் கண்டு ஆனந்திக்கலாம். கோவளம் கடற்கரையும் குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரத்திற்குச் சென்றோமானால், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் மட்டுமல்ல; நமது தமிழகத்தில்- இந்த இருபதாம் நூற்றாண்டில் இனிய தமிழ் வளர முழுமுதல் காரணமாக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் நினைவில்லத்தையும் காணவேண் டியது முக்கியம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்றாலே நமக்கு நினைவு வருவது 83 மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டை, புதுமெருகேற்றப்பட்டுப் பொலி வுறக் காட்சிதரும் 600 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் திருக்கோயில் ஆகிய வைகள் மட்டுமாக இருக்கலாம். ஆனால், கண்டு களித்திடத் தக்க இடங்கள் ஏராளம் உடைய மாவட்டம் இது. தந்தை எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபதிப்பாக, மகன் இராசேந்திரசோழன் உருவாக்கிய கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயில் ஆகியவை அவற்றுள் ஒன்று. காவிரித்தாயின் கரு ணையால் பூவிரித்துள்ள கவின்மிகு சுற்றுலாத் தலமாம் 'முக்கொம்பு' திருச்சி மாவட்டத்திலே குறிப்பிடத்தக்க ஒன்று.

நஞ்சையால் புகழ்பெற்றது தஞ்சை மாவட்டம். தஞ்சாவூர் என்றதுமே ராஜராஜ சோழனால் வான்தொட வகைபட அமைக்கப்பட்ட பெரிய கோயில் என்னும் பிருகதீசுவரர் கோயில், சர போஜி மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட சரசுவதி மகால், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவ ரான தியாகராஜர் சமாதி உள்ள திருவையாறு- கி.பி. முதலாம் நூற்றாண்டில், கரிகாற் சோழனால் கட்டப்பட்ட கல்லணை, திருவாரூர் தேர், நாகூர் தர்கா, அன்னை வேளாங் கன்னி ஆலயம், முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலை, சீர்காழி, குடந்தைக் கோயில்கள் யாவுமே நம் நெஞ்சில் நிழலாடுவது இயற்கை. புடைப்புச் சிற்பங்களோடும், எழுநிலை மாடங்களோடும் எழிலுறக் காட்சிதரும் பூம்புகார் கலைக்கூடம், அண்ணல் காந்தியடிகளா லேயே போற்றப்பட்ட தியாகப் பெண்மணி வள்ளியம்மை பிறந்த தில்லையாடியில் தமிழக அரசு உருவாக்கிய நினைவுச் சின்னம், பரங்கியர் கோட்டை விளங்கும் தரங்கம்பாடி ஆகியவை களும் சுற்றுலாப் பயணிகளைச் சுகம்பெறச் செய்திடும். பட்டுக்கோட்டையை அடுத்துப் பத் தாவது கல்லில், 1814-இல். சரபோஜி மன்ன னால் கட்டப்பட்ட ஒப்பரிய உப்பரிகையாம் 'மனோரா' முக்கியமாகக் காணவேண்டிய ஒன்றா கும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 'புதையல்' என்கிற திரைக் கதையைப் படைப்ப தற்கு மூலக் கருவான இடம் இதுதான்!

அடுத்தது புதுக்கோட்டை. அந்தக் காலத்து அரண்மனையில் இந்தக் காலத்து அலுவலகங்கள்; உயிர் பெற்றவை போல உருவாக்கப்பட்டுள்ள ஆவிடையார்கோயில் சிற்பங்கள், நார்த்தாமலை ஆகியவை மட்டுமல்ல; சுற்றுலாப் பயணிகள், குடுமியான் மலைக்கருகே அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட வியத்தகு விவசா யப் பண்ணையாம் 'அண்ணா பண்ணை'யையும் காணலாம்; மகிழ்ச்சி பூணலாம்.

மதுரை என்றாலே நம் நினைவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரம் உயர்ந்து நிற்கக் கூடும். முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டு - திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை ஆகியவை பெரியாறு அணை, வனவிலங்குச் சரணாலயமாம் தேக்கடி, மாரியம்மன் கோயில்- தெப்பக் குளம், சுருளி அருவி இந்த மாவட்டத்திலே எழிலுற விளங்கும் வைகை அணை, மன்னன் திருமலை நாயக்கர் மகால்- அங்கே நடைபெறும் ஒலி-ஒளிக்காட்சி ஆகியவை மதுரை மாவட்டத்திற்கு வரும் பயணி களை ஆனந்திக்கச் செய்பவைகளாகும்.



காளையார் கோயில்



ஏர்க்காடு ஏரியில் படகுச் சவாரி

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்குச் செல்லுகின்ற சுற்றுலாப் பயணிகள் அழகன் முருகனை அவன் படை வீடுகளில் ஒன்றான பழனியிலே தரிசிக்கலாம். பச்சைமா மலைமேனி, பில்லர் ராக், பிரயண்ட் பூங்கா, பெருமாள் சிகரம், குறிஞ்சியாண்டவர் கோயில், துள்ளி விழும் வெள்ளியருவி, படகுச் சவாரிக்கென்றே படர்ந்திருக்கும் ஏரி, குளிர்- அதே நேரத்தில் பன்னிரண்டு மணிநேரச் சூரியஒளி ஆகியவற்றை யெல்லாம் உணர்ந்தும் கண்டும் உள்ளம் மகிழத் தக்க கொடைக்கானல் உள்ள மாவட்டம் இது!

அடுத்திருப்பது இராமநாதபுரம் மாவட்டம்; அங்கே உள்ள இராமநாதசுவாமி திருக்கோயிலிலே தான் 1220 மீட்டர்- அதாவது 4,000 அடி நீளமுள்ள இந்தியாவிலேயே மிகப்பெரிய பிர காரம் வகைபட அமைக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் தீவுக்கு நீண்டகாலமாக ரயில்மார்க்கமே இருந்து வந்தது; 1973-இல், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பிரம்மாண்டமான விதத் தில் உருவாக்கப்பட்ட தரைவழிப்பாலம் இப்போது சுற்றுலாப் பயணிகளை அங்கே சுகப் பயணம் அழைத்துச் செல்ல உதவுகிறது. அந்தப்பகுதியில் உள்ள கடலில் பவழப் பாறைகள் உண்டு; மகிழ லாம் கண்டு.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத் திற்குப் பயணம் செல்வோர், கட்டாயம் காளை யார் கோயிலுக்குச் சென்று வரவேண்டும். 'சரித் திரப் பிரசித்தி பெற்ற மருதிருவருக்குத் திருவுருவச் சிலை வைக்கப்படும்' என்று அண்மையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறி வித்தாரே- அந்தத் திருப்பத்தூரையும் அவசியம் கண்டு வரவேண்டும்.

காமராசர் மாவட்டத்திற்குச் செல்லுவோர், இந்திய வரலாற்றில் சிறந்த இடம் பிடித்த பெருந் தலைவர் காமராசர் பிறந்த இல்லத்தை மறவாமல் போய்ப் பார்த்து வரவேண்டும்.

சிதம்பரனார் மாவட்டத்திற்குப் போனால், தேசிய கவி பாரதி பாடிய- 'முத்துக் குளிப்பதொரு தென்கடலை'க் காணலாம். வெள்ளை அரசு வெடவெடக்கத் தூத்துக்குடியில் கப்பல் விட்ட தமிழன் வ.உ.சி. இல்லத்தைப் பார்க்கலாம். படை வீடுகண்ட முருகனைத் திருச்செந்தூரில் பாடிப் பரவலாம். பாஞ்சாலங் குறிச்சியில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுப்பியுள்ள கட்ட பொம்மன் கோட்டையைக் கண்டு மகிழலாம்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் என்றதுமே 'பச்சை மலை பவழமலை எங்கள் மலையே' என்று குறவர்களைப் பாடவைத்த குற்றால நீர்வீழ்ச்சி நம் எண்ணத்தைக் குளிர் விக்கும். இந்திய விடுதலைக்காக எழுச்சிக் குரல் எழுப்பிய புலித்தேவன், வீரபாண்டியக் கட்ட பொம்மன் உலாவிய மண்ணில் உலவிக் களித் திடலாம்.

நம் இந்தியத் திருநாட்டின் நிலப்பகுதி முடியு மிடம் கன்னியாகுமரி. முக்கடலும் சங்கமிக்கும் அங்கே- குமரிமுனைக்குச் சென்றால்- காலைச் சூரியன் எழுவதையும், மாலைச் சூரியன் மறை வதையும் ஒரே இடத்திலிருந்து நாம் கண்டுவக்க லாம். கடலோரக் காந்தி மண்டபம், கடலுக்குள்ளி ருந்து தலை நீட்டும் பாறைமீது 1970-இல் கட்டப் பட்ட விவேகானந்தர் நினைவாலயம், விரைவில் தமிழக அரசால் 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட இருக்கும் கடல் பாறை, குமரிக் கோயில், டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட வட்டக் கோட்டை ஆகியவை மட்டுமல்ல கன்னியாகுமரி மாவட்டத்தில்; சுசீந்திரம் கோயில், பத்மநாபபுரம் அரண்மனை, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நமக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துத்தந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோர் வாழ்ந்த இல்லங்களும் அங் குண்டு.

அடுத்தது, தருமபுரி மாவட்டம். கர்நாடகத்தி லிருந்து களிப்போடு ஓடிவரும் காவிரிப் பெண் ணைத் தமிழகம் பாசக் கரம் நீட்டி வரவேற்கும் ஒகேனக்கல் உள்ள மாவட்டம் இது. அயல் நாட்டுப் பயணிகளை அகம் மகிழச் செய்திடும் 'லிட்டில் இங்கிலாண்ட்' எனப்படும் தளி, அரூர்



நாகூர் தர்கா



வேலூர் கோட்டையும் அகழியும்

தீர்த்தமலை, அதியமான் கோட்டை ஆகியவையும் இங்கே பார்த்து மகிழ வேண்டிய இடங்களாகும். ''அதியமான்-ஔவைக்குக் கோட்டம் எழுப்பப் படும்'' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்மையில் (25.9.90) இம்மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது அறிவித்ததும் சுற்றுலாப் பயணிகள் நினைவுகூர வேண்டிய ஒன்றாகும்.

தொழிலால் மட்டுமல்ல; ஏர்க்காடு தரும் எழி லாலும் ஏற்றம் பெற்ற மாவட்டம் சேலம். சேர்வ ராயன் மலைத் தொடரில், கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5,000 அடி உயரத்திலே அமைந்திருக் கும் அழகுமலை ஏர்க்காடு. இப்போதுதான் சீசன் என்பதில்லை; எப்போதும் போய்வரலாம். ஏனென்றால், என்றுமே அங்குள்ள வெப்பம் குறைந்தது 13 டிகிரி; அதிகப்படி 29 டிகிரி சென்டிகிரேடு. இனிய படகுப் பயணத்திற்கேற்ற ஏரி, அண்ணா பூங்கா, லேடீஸ் சீட், சேர்வராயன் கோயில், கரடிக்குகை, பகோடா பாயின்ட் போன் றவை சுற்றுலாப்பயணிகளைச் சொக்க வைக்கும் இடங்களாகும். இந்த மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையும்- அங்கு நடக்கின்ற ஓரி விழாவும் உவகை தருவன; உள்ளம் கவர்வன.

பெரியார் மாவட்டத்திற்குச் சென்றால், பகுத் தறிவுப் பகலவனாம் தந்தை பெரியார் நினை வில்லத்தை அவசியம் பார்த்தாக வேண்டும்; பவானி கூடுதுறை, தாளவாடி மலைப் பகுதி யாவும்- காண்போர் தம் நெஞ்சில் நிம்மதியைத் தூவும்!

கோவை மாவட்டத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள், ஆனைமலை வனவிலங்குச் சரணால



கங்கைகொண்ட சோழபுரம்

யத்தைக் காணாமல்- பெரியாறு அருவி, திரு மூர்த்தி நீர்வீழ்ச்சி, வேளாண்மைப் பல்கலைக் கழகம், மருதமலை ஆகியவைகளைப் பார்த்துப் பரவசப்படாமல் திரும்பமுடியாது.

அதன்பிறகு, நேரு பெருமகனால் 'மலைகளின் ராணி' என்று கூறப்பட்ட உதகமண்டலமாம் ஊட்டி. கிழக்கு-மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் 35 மைல் அகலமும், 6,500 அடி உயரமும் கொண்டதாக அமைந்திருப்பதே ஊட்டி. அங்குள்ள 2,633 மீட்டர் உயரத் தொட்டபெட்டா சிகரம், தாவரவியல் பூங்கா, படகுச் சவாரிக்குப் பாங்கான ஏரி, அதன் கரையில் மரவட்டை ஊர்வதுபோலக் காட்சிதரும் குழந்தைகளின் ரயி லோட்டம், கோத்தகிரி, கூனூர் எல்லாம் சுற்று லாப் பயணிகளின் உள்ளத்தை ஆனந்தக் குளி ரால் ஆட வைப்பவைகளாகும்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு வந்தால், கனகம்பீரமாக நிற்கும் செஞ்சிக் கோட்டை நம்மைத் திகைக்க வைக்கும். நம் எண்ணத்திரை யில் தேசிங்குராஜன் எழுச்சி முழக்கமிடுவான்! 'அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்தத் தெய்வமான' தில்லை நடராசர் திருக்கோயில் விளங்கும் சிதம்பரம், புதுவை மாநில எல்லையிலே அமைந்துள்ள ஆரோவில், இயற்கையாகவே அமைந்துள்ள கல் மரப் பூங்காவான திருவக்கரை, நெய்வேலி நிலக் கரிச் சுரங்கம், பிச்சாவரம் சுற்றுலா மையம், வடலூர் ஆகியவைகளும் நம் நினைவில் நிலைத்து விடும். 'முதலாவது நவீன இந்தியப் பல்கலைக் கழகம்' என்ற சிறப்புக்குரிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கல்விச் சுற்றுலா வருவோர் காணவேண்டிய ஒன்றாகும்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகிறவர்கள்- இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் விக்கிரமராஜ சிங்கனின் நினை வாக வேலூரில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அண்மையில் அழகுற அமைக்கப் பட்ட முத்து மண்டபத்தைக் கண்டானந்திக்கலாம். வேலூர்ப் புரட்சி மூலக் காரணமாயிருந்த கோட்டை கொத்தளங்களும் அங்குண்டு!

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் திற்குச் சென்றால்- தென்னிந்தியாவின் மிகப் பெரிய கோயில்களில் ஒன்றாக- 200 அடி உயரத் தில் எழுந்து நிற்கும் அருணாசலேஸ்வரர் கோயி லைப் பார்க்கலாம்; இங்கு ஏற்றப்படும் கார்த்தி கைத் தீபம் குறிப்பிடத்தக்கதாகும். இவை மட்டுமா? சாத்தனூர் அணை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, அமிர்திக்காடு ஆகியவைகளும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

—இப்படித் தமிழகமெங்கும், கண்டு மகிழத் தக்க சுற்றுலாத் தலங்கள் கணக்கற்றவை உண்டு. ஆங்காங்கே, வருவோர் இளைப்பாற வகையான தங்குமிடங்களும் அரசு சுற்றுலாத்துறை மூலமே அமைக்கப்பட்டுள்ளன!

— பி.எல்.ஆர்.

# ஒருங்கிணைந்த மானாவாரிப் பயிர் மேம்பாடு

**''வேளாண்மையில் நவீன முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், விவசாயிகள் தொழில்நுட்ப அறிவு பெறுகிறார்கள்; மானா வாரி நிலத்தின் விளைச் சலும் அதிகமாகிறது; வருமானம் பெருகும் வாய்ப்பும் உண்டா கிறது'' என்கிறார், கட்டு ரையாசிரியர்.**

தமிழ்நாட்டில் சுமார் 32 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப் படுகிறது. மானாவாரி பயிர் சாகு படியில் உற்பத்தியைப் பெருக்கவும், அதனைச் சார்ந்துள்ள உழவர் களின் வருவாயைப் பெருக்கவும், அதன் மூலம் அவர்கள் வாழ்வு மேம்பாடு அடையவும், ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மூன்று ஆண்டுகளில் தமிழக அரசு, வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்திட உள்ளது. இத்திட்டம் 1990-91-இல் துவக்கப் பட்டுள்ளது. இதற்கென இந்த ஆண்டில் ரூ.150 இலட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

மானாவாரி பயிர் செய்யப்படும் 32 இலட்சம் எக்டேர் பரப்பு, நீர்ப்பிடிப்புத் தன்மைக்கேற்றவாறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப் பிரிவில் 100 எக்டேர் பரப்பள விற்குச் சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, மானாவாரி பயிர் சாகுபடிக்கு ஏற்ற தொழில் நுட்பங்களை, அதனைச் சார்ந்த விவசாயிகள் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு

—திருமதி எஸ்.மாலதி இ.ஆ.ப.
வேளாண்மை இயக்குநர்
சென்னை-

தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து இதர மாவட்டங்களில் 300 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 30,000 எக் டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 100 எக்டேர் பரப்பு ஒரு நிரூபணமாகச் செயல் பட்டு மற்ற விவசாயிகளும் இதன் மூலம் கிடைக்கும் பயனை அறிந்து தாங்களும் அடுத்து வரும் பயிர் பருவத்தில் கடைப்பிடிக்க ஒரு வழி முறையாக அமையும்

நிரூபணமாக அமைக்கப்படும் இந்த 100 எக்டேர் பரப்பில், டிராக்டர் கொண்டு கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழுவுரம், ஆழச் சால் அகலப்பாத்தி அமைத்தல், இருபோகச் சாகுபடி, தீவனப் பயிர் வளர்த்தல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, மேலுரமாகத் தழைச் சத்து இடுதல், சரிவில் மரம் வளர்த் தல், மழைக்கு முன்னதாக விதைத் தல், மரங்கள் நடுதல் மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல் போன்ற தொழில் நுட்பங்கள் கடைப்பிடிக் கப்படும்.

இத்தகைய தொழில் நுட்பங் களைக் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற வகையில், பயிர் செய்வதற்கு முன்ன தாக, நிரூபணத்தில் பங்குகொள்ள விருக்கும் உழவர்களுக்கு, இந்தத் தொழில் நுட்பங்களின் அடிப்படை, அதனை எவ்வாறு செயல்படுத்து வது, மற்றும் அதன் பலன்கள் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டன.

பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை யாக நபர் ஒன்றுக்கு ரூ.15/- வழங் கப்பட்டது. பயிற்சியின் பலனால், பல தொழில் நுட்பங்களை அறிந்து செயல்படுத்துவதற்குத் தயாராக விவசாயிகள் இருந்தாலும் போதிய நிதி வசதியின்மையால் பல விவ சாயிகள் தொழில்நுட்பங்களைக் கையாளாமல் விட்டுவிடுகின்றனர். இதனைப் போக்கவும், மானாவாரி பகுதி விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், தொழில்நுட்பங்களைக் கையாள மான்ய வசதிகளுக்கு இத் திட்டத்தில் வகை செய்யப்பட் டுள்ளது.





**இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான சாதிகளும் மூடத்தனங்களும் இருந்து கொண்டிருக்கும் காலம்வரை, நாம் மற்ற நாடுகளின் முன்பாகத் தலைகுனிந்து வாழும் படியான நிலைதான் இருக்கும்.**

நிலத்தினை ஆழமாக உழுவதால் களைகள் நீக்கப்பட்டு மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. மாடுகளைக் கொண்டு உழுவதால் ஆழமாக உழ இயலாது என்பதால் டிராக்டர் மூலம் கோடை உழவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு அதற்காகும் செலவில் 50 சதம் அதிக பட்சம் எக்டேருக்கு ரூ.180/- மான்யம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மானாவாரி நிலங்களுக்கு உரமிடும் பழக்கம் மெதுவாகப் பரவி வருகிறது. அடியுரமாகத் தொழுவுரம் இடுவதற்குப் போதுமான தொழு உரமோ, கம்போஸ்டோ கிடைப்பது இல்லை. எனவே குறைந்த அளவு தொழு உரத்தைக் கொண்டு ஊட்டமேற்றிய தொழுவுரம் தயார் செய்து அளிக்கும்போது இயற்கை உரம் மற்றும் செயற்கை உரமும் முழுமையாக அளிக்கும் பயன் கிடைக்கிறது. ஊட்டமேற்றிய தொழுவுரம் தயாரிக்க, செயற்கை உரங்களுக்கு எக்டேருக்கு ரூ.95/- வரை மான்யம் அளிக்கப்படுகிறது.

இருபருவங்களிலும் பெய்யும் மழை நீரைக் கொண்டு ஒரு போகத்திற்குப் பதில் இருபோகம் பயிரிட வாய்ப்பு உள்ளது. இதனால் கூடுதல் வருமானம் பெற இயலும். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டாவது போகமாகப் பயிரிடும் பரப்பிற்கு விதைகள் மற்றும் உயிர் உரங்களுக்கென மான்யமாக எக்டேருக்கு ரூ.50/- வரை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் பசுந்தீவனப் பயிர்ப் பற்றாக்குறையை ஓரளவிற்கேனும் போக்குவதற்கு, இந்த 100 எக்டேர் பகுதியில் ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய நிலத்தில் ஒரு சிறு பகுதியில் தீவனப் பயிர் பயிரிட ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஊடு பயிராகவோ, வரப்பு ஓரங்களிலோ பயிரிடத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பசுந்தீவனப் பயிர் பயிரிடும் விவசாயிகளுக்கு, எக்டேருக்கு இடுபொருட்களாக ரூ.25/- வரை மான்யம் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிப்பதன் மூலம், மருந்தடிப்பதைக் குறைத்தும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்குக் கேடு வராமல் பார்த்தும், நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காமலும் பாதுகாக்கலாம். இம்முறைகளை விவசாயிகள் தீவிரமாகக் கடைப்பிடிக்க அதற்குத் தேவையான விளக்குப்பொறி மற்றும் இனக் கவர்ச்சிப் பொறி ஆகிய உபகரணங்களுக்கு 50 சதம் மான்யம் அதிகபட்சமாக எக்டேருக்கு ரூ.50/- வரையில் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற திட்டத்தினால், விவசாயிகள் தொழில் நுட்ப அறிவு பெறுவதுடன், அவற்றைக் கடைப்பிடிப்பதால் மானாவாரி நிலத்தில் உற்பத்தியும் உயரும், வருமானம் பெருகும். மேலும், தொடர்ந்து வரும் ஆண்டுகளில், இதனால் பயன்பெறும் விவசாயிகளைத் தெரிந்து மற்ற சகோதர விவசாயிகளும் பயன்பெறுவார்கள்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள திடீர் நகர், அஞ்சுகம் நகர்ப் பகுதிகளில் நேரிட்ட தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார். சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷீலாராணி சுங்கத் இ.ஆ.ப. உடன் உள்ளார் (19.9.90).



## TNPSC

விளம்பர எண் : 36/90

தொகுதி பத்தில் அடங்கிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் ஐந்து பண்டகக் காப்பாளர் மற்றும் தொழில் வணிக இயல் துறையில் இரண்டு பண்டகக் காப்பாளர் பதவிகளுக்குப் போட்டித் தேர்வு மூலம் நேரடி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விரண்டு பதவிகட்கும் ஒரு விண்ணப்பமே போதுமானது. கோரப்படும் பதவிகளை முன்னுரிமை வரிசை முறையில் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

சம்பள ஏற்ற முறை: மாதம் ஒன்றுக்கு ரூ. 1200—30—1560—40—2040.

1-7-90 அன்று வயது: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

மற்றவர்களுக்கு 30 வயதைப் பூர்த்தி செய்யாதிருத்தல் வேண்டும்.

கல்வித் தகுதி : ஏதாவதொரு பல்கலைக் கழக மானியக் குழுவில் அனுமதிக்கப்பட்ட இண்டர்மீடியட் அல்லது புதுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

நியமன ஒதுக்கீடு : தகுதியான விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்டவாறு இனச் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

| பதவியின் பெயர் | நியமன எண்ணிக்கைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | தா.வ. தா.ப. | மி.பி.வ. ம.சீ.ம. | பிற்பட்ட வகுப்பினர் | மற்ற வர்கள் | மொத்தம் |
| வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பண்டகக் காப்பாளர் பதவி | 1 | 1 (மகளிர்) | 1 | 2 | 5 |
| தொழில் வணிக இயல் முறையில் பண்டகக் காப்பாளர் பதவி | 1 | ... | ... | 1 | 2 |
| | | | | | 7 |

குறிப்பு: (1) காலியிட மதிப்பீடு தோராயமானவையே, தெரிவு செய்யப்படும்போது மாறுதல் இருக்கலாம்.

(2) இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ரூ. 500 முதல் ரூ. 1000 வரை பிணையத் தொகை (செக்யூரிடி) செலுத்த வேண்டும்.

(3) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்கும் ஆதரவற்ற விதவைகள், குறைந்த அளவு மதிப்பெண்களையே பெற்றிருந்தாலும், தெரிவிக்குத் தகுதியானவராகக் கருதப்பட்டு, அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருக்கும் மற்றவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம் : ஆதரவற்ற விதவை என்பது தான் வாழ்வதற்கு எந்தவொரு ஆதரவோ அல்லது பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு யாதொரு துணையோ இல்லாத நிலை என்ற பொருளாகும்.

3. தேர்வு மையங்கள்

| குறியீட்டெண் | பெயர் |
|---|---|
| 01 | கோயம்புத்தூர் |
| 02 | சென்னை |
| 03 | மதுரை |
| 04 | பாளையங்கோட்டை |
| 05 | சேலம் |
| 06 | திருச்சிராப்பள்ளி. |

4. தேர்வின் விவரங்கள்: இப்போட்டித் தேர்வு அடுத்தடுத்து இரண்டு நிலைகளை யுடையவை. அவை :—

(1) முதனிலைத் தேர்வு மூலம் முதன்மைத் தேர்வுக்குத் தெரிவு செய்தல்.

(2) முதன்மைத் தேர்வு மூலம் பதவிகளுக்கு விண்ணப்பதாரரைத் தெரிவு செய்தல்.

முதனிலைத் தேர்வு : (மேல்நிலைக் கல்விநிலை) முதனிலைத் தேர்வு ஒற்றைத் தாளுடன் கூடிய பொது அறிவுத் தாள் ( General Knowledge). அவற்றில் கொள் குறி ( Objective ) வகைக்கு 50 மதிப்பெண்கள் மற்றும் விவ ரிப்பு ( Descriptive ) வகைக்கு 50 மதிப்பெண்களுமாக இரண்டு மணி நேரம் கால அளவில் மொத்தம் 100 மதிப் பெண்களுக்கென நடைபெறும். முதன்மைத் தேர்வுக்குப் போட்டியாளர்களைக் குறைப்பதே இத்தேர்வின் நோக்கம். கேள்வித்தாள் இரண்டு பாகங்களைக் கொண்ட ஒரே தாளாக இருக்கும். இரண்டு பாகங்களையும் ஒரு சேர விடையளிக்க வேண்டும். கேள்வித்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி யில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும்; தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும். தமிழிலும் ஆங்கி லத்திலுமாகக் கலந்து விடையளிக்கப்பட்ட விடைத்தாள் செல்லாததாக்கப்படும். முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப் பெண்கள், தெரிவு செய்வதற்கான மதிப்பெண்களுடன் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு பதவிக்கும் பதவியின் எண்ணிக்கையில் பத்து மடங்கு எண்ணிக்கையி லான விண்ணப்பதாரர்களே இத்தேர்வின் மூலம் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். முதனிலைத் தேர்வுக்கு அனுமதிக்கவே இவ்விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக் கப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் மூலம் மறுபடியும் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இத்தொகுதித் தேர்வுக்கு 1000 விண்ணப்பங்களுக்கு மேலாகவோ அல்லது பதவிகளில் மொத்த எண்ணிக்கையில் பத்து மடங்கிற்கு மேலாகவோ விண்ணப்பங்கள் பெறப் படின் முதனிலைத் தேர்வு நடத்தப்படும்.

முதன்மைத் தேர்வு: முதன்மைத் தேர்வு எழுத்துத் தேர்வை உள்ளடக்கியதாகும். முதன்மைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களைக் கொண்டு முடிவான படி நிலை ( Ranking ) நிர்ண யிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் படி நிலையின் அடிப் படையில் அவர்களுடைய விண்ணப்பத்தில் கோரப்பட்ட பதவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவர்.

முதன்மைத் தேர்வின் திட்டம்.

மேல்நிலை கல்வி நிலை

| பொருள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவு செய்வதற்கான குறைந்தபட்ச மதிப் பெண்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) கட்டாய பாடங்கள் | | |
| ஆங்கிலக் கட்டுரை ... | 100 | 180 |
| பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) ... | 100 | |
| மொழி பெயர்ப்பு மற்றும் கட்டுரை (தமிழ், தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம் அல்லது இந்தி மொழியில் விடை யளித்தல்) ... | 100 | |
| மூன்று விருப்பப் பாடங்கள் ( Optional subjects ) (100 மதிப்பெண்கள் தனித்தனியாக). ... | 300 | |

குறிப்பு :(1) பொது அறிவு தவிர மற்ற பாடங்களின் தேர்வு நேரம் மூன்று மணியாகும். பொது அறிவுப் பாடத் தேர்வுக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே.

(2) பொது அறிவு மற்றும் விருப்பப்பாடங்களுக்கான வினாத்தாட்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கும். அவைகளை ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ ஏதாவதொரு மொழியில் விடையளிக்க வேண்டும்; இரண்டு மொழியிலும் கலந்து எழுதுதல் கூடாது.

List of Optional Subjects (only one subject from each of the division should be taken).

**Division I**

1. Mathematics
2. Physics
3. Political Science
4. Elements of Economics
5. Geography
6. Botany
7. Home Science
8. General Science (S.S.L.C. Standard)

**Division II**

1. Psychology
2. Zoology
3. Elements of Commerce
4. Statistics
5. Chemistry
6. History
7. Social Studies (S.S.L.C. Standard)
8. Fine Arts.

**Division III**

1. Sociology
2. Tamil Language and Literature
3. Philosophy
4. Ethics and Indian Culture
5. Biology
6. Logic Scientific Methods
7. Accountancy
8. Environmental Studies.

5. தேர்வுக் கட்டணம் : ரூ. 30.

மேற்படி தேர்வுக் கட்டணம் ஏதேனும் ஒரு மாநில பாரத வங்கியின் கிளையில் (any branch of State Bank of India)) பெறப்பட்ட கோடிட்ட வரைவு **(Demand Draft)** மூலமாக செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களுக்கு மாநில பாரத வங்கி ( State Bank of India) ) ஆயிரம் விளக்கு, சென்னை என்கின்ற விலாசத்தில் மாற்றக் கூடியதாகவோ அல்லது இந்திய அஞ்சல் ஆணை மூலமாக, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு, சென்னை அண்ணா சாலையில் உள்ள அஞ்சல் நிலையத்தில் மாற்றக் கூடியதாகவோ இருக்குமாறு பெற்று விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். மற்ற வகைகளில் அனுப்பப்படும் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இந்திய அஞ்சல் ஆணை/கோடிட்ட வங்கி வரைவு 1-9-90-க்குப் பிறகு பெற்றிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பிக்கும் முறை:—

முதனிலைத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், சென்னை 600 002 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு (30 cm. x 21cm.). அளவுள்ள முழு நீள வெள்ளைத் தாளில் சீராக இடைவெளி விட்டு விண்ணப்பத்தையும், ஆளறிச் சான்றிதழையும் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். வெளியிடங்களில் தனியார் மூலம், விற்கப்படும் விண்ணப்பங்களை உபயோகிக்கத் தடையில்லை. ஆனால் அவ்விண்ணப்பங்களில் தேர்வாணைய அறிக்கையில் கோரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் இருத்தல் வேண்டும்.

''தொகுதி பத்தில் அடங்கிய பண்டகக் காப்பாளர் பதவிக்கான 1990-ஆம் ஆண்டுக்கான முதனிலைத் தேர்வு விண்ணப்பம்'' என மேலுறையில் எழுதியனுப்ப வேண்டும்.

7. (அ) விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் கீழே கண்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும் :

1. தேர்வுக் கட்டணத்தை கோடிட்ட பாரத வங்கி வரைவு/இந்திய அஞ்சல் ஆணை மூலம் அப்புதல் வேண்டும்.
(கட்டணச் சலுகைகள் உள்ளவர்கள் தவிர)

2. ஆளறிச் சான்றிதழ் (மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு)

3. விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய நிழற் படத்தின் ஒரேமாதிரியான 3 நகல்களைக் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு நகலை ஒட்ட வேண்டும். மற்றொன்றை வருகைத் தாளில் ஒட்ட வேண்டும். அடுத்ததை ஒரு உறையில் வைத்து மற்ற ஆவணங் களுடன் விண்ணப்பத்தில் தைத்து அனுப்ப வேண்டும்.

4. போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய சுயவிலாசமிட்ட அஞ்சல் அட்டை ஒன்று.

5. வயது மற்றும் கல்வித் தகுதிக்கான சான்றிதழ்களின் நகல்கள்.

(ஆ) அரசுப் பணி மற்றும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் பணி செய்யும் விண்ணப்பதாரர்கள் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப் பிக்கலாம். அதே சமயத்தில் விண்ணப்பதாரர்கள் தேர்வில் கலந்து கொள் ளும் விவரத்தை துறைத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருத்தல் வேண்டும்.

(இ) தகுந்த தேர்வுக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் குறைபாடுஉள்ள விண் ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்பட்ட பின் பெறப் படும் கடிதங்களை எக்காரணத்தைக் கொண்டும் மறு பரிசீலனை செய்யப் படமாட்டா.

விண்ணப்பத்துடன் கல்வி, வயது மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைக்கான அனுப்பப் படும் சாதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்படி நகல்களை (Xerox) மட்டும் அனுப்பினால் அவைகளே முதனிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கு போதுமானதாகும். மூலச் சான்றிதழ் களை அனுப்ப வேண்டியதில்லை.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேர்வாணைய அலுவலகத்தில் பெறு வதற்கான கடைசி நாள் :

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கேட்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் இந்திய அஞ்சல் ஆணை/வங்கி வரைவுகளுடன் தேர்வாணைய அலுவலகத்திற்கு 5-11-1990 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடைசித் தேதிக்குப் பிறகு பெறப்படும் விணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர், தாயகம் திரும்பி யோர், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் ராணுவத்தினர் முதலியோருக்கு வயது மற்றும் கல்வித் தகுதி, கட்டணச் சலுகை சம்மந்தமாக அனுமதிக்கப்பட்ட சலுகைகளைக் கூறும் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் மற்றும், தேர்வாணையத்தின் அறிவிக்கை 16-8-89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளி யீட்டில் (Bulletin - எஸ். 18) வெளியிடப்பட்டுள்ளது. செய்தி அறிவிப்பு வெளியீடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறையில் அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின் மூலம் விலைக்குக் கிடைக்கப் பெறும். மேற்படி பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் 1-9-89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பதிப்புக்களிலும் வெளியிடப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் பி.வ. / சீர் மரபினர் களுக்கும் பொருந்தும்.

சுருக்கக் குறியீடு.

தா.வ. — தாழ்த்தப்பட்ட வகுப்பினர்
தா.ப. — தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
மி.பி.வ. — மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
ம.சீ.ம. — மற்றும் சீர் மரபினர்.
பி.வ. — பின் தங்கிய வகுப்பினர்.

**FORMAT**

*Quote Advertisement No.*——————

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**APPLICATION FORM FOR PRELIMINARY EXAMINATION**

(Candidate should send only one application for admission to this examination with the prescribed application fee)

*NAME OF POST AND SERVICE* : *STORE KEEPER GROUP X SERVICE*

1. Examination Centre : with Code Number ............

2. Register Number :.......................

(*To be assigned by Office*)

3. Details of Fee Paid :

| *Name of Post Office/ Bank* | *Number and Date of IPO/ Draft* | *Value Rs. P.* |
|---|---|---|
| | | |

*Paste here a signed copy of your recent passport size photograph. (5 cm. x 7 cm.*

4. Do you claim fee exemption ? : Yes No

5. Name of the Applicant : (IN CAPITALS)

.......................................................................................

.......................................................................................

6. Father's Name :

7. Address for communication :

8. Date of Birth : ______ 8(*a*) Age as on 1-7-90 ______ years

(Write 1 to 9 as 01 and 09)

9. Sex : ______

10. Community Code: ______

(SC/ST-1, BC-2 : MBC/DC-3: Others-4)

10 (*a*) Religion Code : ______

Hindu-1 : Muslim-2 : Xian-3 : Others-4)

11. Do you possess the Prescribed educational qualification : Yes/No.

| *Examination* | *Subjects of study* | *Year of pass* | *Marks/Grade* | *School/College/ University* |
|---|---|---|---|---|
| | | | | |

12. Do you possess the additional or preferential qualifications prescribed for the posts ? Yes No.

| *Examination Passed* | *Subject of study* | *Year of pass* | *Marks/Grade* | *Institute/College University* |
|---|---|---|---|---|
| | | | | |

13. Whether employed, if so the details :

| *Employer's Address* | *Posts Held* | *Period* | |
|---|---|---|---|
| | | *From* | *To* |
| | | | |

14. Do you claim any relaxation/concession in age, qualifications prescribed or in payment of fees ? Yes No

Subtantiate your claim :

15. **DECLARATION**

I hereby declare that all the statement made in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In and event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the advertisement, notification and 'Instructions to Candidates' carefully and I hereby undertake to abide by the Instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

*I have informed my Employer in writing that I am applying for this examination.

(*Strike off this if not applicable)

DATE :

STATION :

*Signature of the Candidate.*

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

PRELIMINARY EXAMINATION FOR THE POST OF STORE KEEPER INCLUDED IN GROUP X SERVICES 1990.

## IDENTIFICATION CERTIFICATE

*Paste here a signed copy of your recent passport size photograph (5 cm. x 7 cm.)*

1. Particulars to be filled in by the applicant :

(i) Name of Applicant :

(ii) Date of Birth :

(iii) Postal Address :
(For Communication)

*Signature of Candidate.*

2. Centre of Examination :

3. Register Number :

(To be filled by TNPSC Office)

*Controller of Examination.*

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION,
MADRAS-600 002.

DATE : 1990.

DIPR/2437/90/MS/MCS

# TNPSC

விளம்பர எண். 35/90

தமிழ்நாடு தொழிலாளர் பணியில் தொழிலாளர் அலுவலர் பதவியில் 10 காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 5.11.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000.

| | | | |
|---|---|---|---|
| ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | - | 2 | |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | - | 1 | (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | - | 3 | |
| பகிரங்கப் போட்டி (ப.போ) | - | 4 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது. |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரைக் கொண்டு நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.)

**தகுதி:** (i) A degree and

(ii) A degree or Diploma in Social Work or Social Science or Labour Relations or Social Welfare or a Diploma in Labour Laws awarded by the Indian Law Institute, New Delhi or a Diploma in Labour Laws and Administrative Laws or a degree in Law or a Post Graduate diploma in Labour Administration awarded by the Tamil Nadu Institute of Labour Studies or a Post Graduate Diploma in Personnel Management, Industrial Relations and Labour Welfare awarded by the Madras Productivity Council; or a Post Graduate Diploma in Personnel Management and Industrial Relations awarded by the Madurai Institute of Social Work, Madurai or M.A., degree in Work Education awarded by the University of Madras.

**NOTE:** Destitute widows who possess the prescribed qualification and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**EXPLANATION:** 'Destitute Widow' means, a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப் பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/ அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.10.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.10.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறை யுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2441/எம்எஸ்/90/அக்கார்ட்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி / நவீன / பருத்தி / வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக்' கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங் ● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

